Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து

(C/1325)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (27.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 210
















# ஐக்கிய இலங்கைக்குள் அரசியல் தீர்வு



## கூட்டமைப்பு எப்போதும் தயார்

(கொழும்பு)

பிரிக்கப்படாத ஒன்றிணைந்த ஐக்கிய இலங்கைக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நேர்மையான அதிகாரம் மிக்க அரசியல் தீர்வு குறித்து அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளை நடத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் தயார் நிலையில இருக்கிறது என கூட்டமைப்பின் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் நினைவு நாளையொட்டி தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு நேற்றுப் பிற்பகல் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தலைமை தாங்கி உரையாற்றிய போதே கூட்மைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

சிறுபான்மை இன தமிழ் முஸ்லிம் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பாகவும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அரசு நடவடிக்கை எடுத்தது.

இதனைத்தொடர்ந்து சந்திரிகா பண்டாரநாயக்க அரசில் 1995, 1997, 2000 ஆம் ஆண்டு ஆகிய காலப்பகுதிகளில் சிறுபான்மை இன அரசியல் தீர்வு மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாகவும் பேசப்பட்டது.

பின்னர் இப்போது மகிந்த ராஜபக்ஷ அரசு சர்வகட்சி குழு அமைக்கப்பட்டு அதனூடாகவும் தீர்வுக்கான நடவடிக்கை எடுத்தல்

19 ஆம் பக்கம் பார்க்க

## அதிகரிக்கிறது கோதுமை மாவின் விலை

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை இன்று முதல் கிலோவுக்கு 8.50 சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இன்று அமுலுக்கு வரும் வகையில் கோதுமை மாவின் விலை 8 ரூபா 50 சதம் என்ற தொகையால் அதிகரிக்கும் என செரண்டிப் 'மா நிறுவனத்தின் பிரதம நிதி அலுவலர் மொஹமட் ரியாஸ் தெரிவித்துள்ளார்.

## தீயில் எரிந்து பெண் மரணம்

(வடமராட்சி)

பருத்தித்துறை 3 ஆம் குறுக்குத் தெரு சின்னத்தோட்டம் பகுதியில் மன நலம் பாதிக்கப்பட்ட பெண்ணொருவர் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி எரித்து மரணமடைந்துள்ளார்.

இக்கொடூரச் சம்பவம் நேற்று நண்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த பகுதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை மதுமலர் (வயது - 47) என்பவரே இவ்வாறு எரிந்து

19 ஆம் பக்கம் பார்க்க

## பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் காரியாலயம் தீக்கிரை

### காத்தான்குடியில் களேபரம்

(கொழும்பு)

மட்டக்களப்பு, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன காரியாலயக் கட்டடம் இனந்தெரியாதோரினால் நேற்று அதிகாலை தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

சம்மேளன அலுவலகக் கட்டடத்தின் முன் கதவு தீயினால் கருகியதுடன், ஜன்னல் கதவுகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களும் இராணுவத்தினரும் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர். இது தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். நகரில் மாபெரும் மே தின எழுச்சிப் பேரணி

## உரிமைகளை வென்றெடுக்க ஒன்றுபட்டு உழைப்போம்

(யாழ்ப்பாணம்)

உலகத் தொழிலாளர் தினமான எதிர்வரும் மே தினத்தில் வடபகுதியின் அனைத்துத் தொழிலாளர்களும் ஓர் அணியில் திரண்டு பிரமாண்டமான எழுச்சிப் பேரணி ஒன்றை யாழ். நகரில் நடத்தவுள்ளனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மே தினப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும், அனைத்து தொழில சார் எமது உறவுகளும், யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்களும், பொதுமக்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் நடைபெறவுள்ள இப்பேரணியில், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொள்ளவுள்ளதுடன், தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளை வலியுறுத்தும், கோஷங்களும் எழுப்பப்படவுள்ளன. அத்துடன் அவற்றை வலியுறுத்தும் சுலோக அட்டைகளும், அலங்கார ஊர்திகளும் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல தசாப்தங்களின் பின்னர் நடைபெறவுள்ள இந்த மேதினப் பேரணி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தாக அமையுமென கருதப்படுவதுடன், இந்த மேதினத்தில் கடந்த காலத்தில் தமிழ் பிரதேசங்களில் ஜனநாயக உரிமை மறுக்கப்பட்டிருந்த இடதுசாரி, முற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஒருங்கிணைந்து தொழிலாளர்களின் உரிமைக்கு ஒருமித்து குரல் எழுப்பவுள்ளனர்.

19 ஆம் பக்கம் பார்க்க

## கிழக்கில் ஹர்த்தால்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பிரதான நகரப் பகுதிகள் சிலவற்றில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. தம்புள்ளை பகுதியில் உள்ள பள்ளிவாசல் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பல பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஹர்த்தால் காரணமாக குறித்த பகுதிகளில் கடைகள் மூடப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை இந்தப் பகுதிகளில் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

## விகாரை மீது தாக்குதல் லண்டனில் சலசலப்பு

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்தின் லண்டன் கிங்ஸ்பரி ஸ்ரீசத்தாதிஸ்ஸ சர்வதேச பௌத்த மத்திய நிலையம் மீது நேற்று முன்தினம் பெற்றோல் குண்டுத் தாக்குதலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பௌத்த விகாரையின் மீது மூன்று பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளதாகவும், விகாரையின் சுவர் சிறிதளவு

19 ஆம் பக்கம் பார்க்க

## மூதூர் படுகொலை மீண்டும் விசாரணை

(கொழும்பு)

பிரான்ஸ் தொண்டர் நிறுவனமான அக்ஷன் பெய்ம் பணியாளர்கள் 17 பேர் மூதூரில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக புதிய விசாரணைகளை நடத்தப்போவதாக அரசு தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மூதூரில் தமது பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டது தொடர்பில் இலங்கை அரசு போதிய கவனம் எடுத்து விசாரணை நடத்தவோ குற்றவாளிகளை கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்தவோ இல்லை என்று குற்றம் சாட்டும் அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மீளாய்வுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அக்ஷன் பெய்ம் நிறுவனம் கடந்த திங்கட்கிழமை அறிவித்திருந்தது.

இந்த நிலையிலேயே இந்தப் படுகொலைகள் தொடர்பாக புதிய விசாரணைகளை

19 ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாயில் வெடிபொருள் மீட்பு

(கோப்பாய்)

யாழ். கோப்பாய் பிரதேசத்தில் காடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 61 மோட்டார் குண்டுகளை பொலிஸார் மீட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## சொத்துக்கள் குவிந்தது எப்படி விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

பிரபல அரசியல்வாதிகளின் சொத்துக் குவிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தொடர்பில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிகவும் குறுகிய காலத்தில் குறித்த அரசியல்வாதிகள் கோடீஸ்வர வர்த்தகர்களாக மாற்றமடைந்துள்ளனர். இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர்

19 ஆம் பக்கம் பார்க்க

# வீதிப் புனரமைப்பு ஆரம்பம் காரைநகரில் புதிய செயற்றிட்டம்



(காரைநகர்)

காரைநகரில்பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதிஒதுக்கீட்டின் கீழ் இரு வீதிகள் புனரமைப்பு செய்வதற்காக திரை நீக்கம் செய்து ஆரம்பித்து வைத்தார். பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமான வி.கண்ணன் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் 30 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத வீதிகளான தோப்புக்காடு பிரதான வீதி மற்றும் கிழக்கையும், மேற்கையும் இணைக்கும் கேசடை விவசாயிகளுக்கான வீதிகள். இவ்வாறான இரு வீதிகளும் மக்கள் பயன்பாட்டுக்கு முக்கியத்துவம் வாய்ந்த வீதிகளாகும்.

இவ் வீதிக்கான பயனாளிகள் என்னிடம் விடுத்தகோரிக்கையினை ஏற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்து இந்த வீதிகள் செப்பனிடுவதற்கான அனுமதியைப் பெற்றிருந் தேன்.

இப்பொழுது இந்தவீதிப் புனரமைப்பு வேலைகள் நிறைவேறுவதையிட்டு அமைச்சருக்கு இந்த வேளையில் எங்கள் மக்கள் சார்பாக நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். காரைநகரில் இவ்வாறான பல வீதிகள் புனரமைப்பு செய்திருக்கின்றோம். இவ்வாறான பலவீதிகள் பழுதடைந்து காணப்படுகின்றன. அதேபோன்று பலவீதிகளைப் புனரமைப்பு செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மிகவிரைவில் அவற்றையும் செய்து முடிப்போம் என்று கூறினார்.

இந்நிகழ்வில் காரைநகர் பிரதேசசெயலர் திருமதி தேவநந்தினி மற்றும் பொருளாதார அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன் மற்றும் பொது மக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

(முல்லைத்தீவு)

சத்திய முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (04)

## வெடி குண்டுக்கு இரையாகிய இளம் பிஞ்சுகளின் சடலம் ஒப்படைப்பு



(யாழ்ப்பாணம்)

பளை முல்லையடிப் பகுதியில் நேற்று முன்தினம் மர்மப் பொருளை எடுத்து விளையாடியபோது அது வெடித்ததில் பலியான சகோதரர்கள் இருவரது சடலங்களும் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களான முகுந்தன் தமிழ்மாறன் (வயது-04), முகுந்தன் தனோஜன் (வயது-02) ஆகிய இருவருமே பலியாகியுள்ளனர்.

இவ்விரு சிறுவர்களின் சடலங்கள் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக பளைப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் இரவு 8.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (பா)

## ஆயுர்வேத வைத்தியர்களின் விசேட மாநாடு யாழில்

(வேலணை)

சித்த ஆயுர்வேத சுதேச வைத்தியர்களினது மாநாடொன்று எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

சுதேச ஆயுர்வேத பாதுகாப்புச் சபையின் இணையத்தின் தலைவர் வைத்திய கலாநிதி செல்வமகேந்திரன் தலைமையில் நடைபெறவிருக்கின்ற இந்த மாநாட்டில் கொழும்பிலுள்ள ஆயுர்வேத திணைக்களத்தில் இருந்து வைத்திய கலாநிதி திருமதி விக்கினவேணி செல்வநாதன், ஆயுர்வேத திணைக்களத்தின் வடமாகாண பணிப்பாளர் திருமதி சியாமா துரைரத்தினம் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

மேலும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பெருந்தொகையான சித்த ஆயுர்வேத வைத்தியக் கலாநிதிகளும் இந்த மாநாட்டில் பங்கெடுத்துக்கொள்வதற்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் பல இடங்களில் உள்ள அனைத்து சித்த ஆயுர்வேத வைத்தியக் கலாநிதிகளும் பங்கெடுத்துக்கொள்ளும் வகையில் இந்த மாநாடு அமைந்துள்ளதால், அனைத்துச் சித்த, ஆயுர்வேத வைத்தியர்களையும் கலந்து கொள்ளுமாறு மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

மாநாட்டில் முக்கியமாக இன்றைய காலத்தில் சித்த ஆயுர்வேத வைத்தியர்களினது மருத்துவத் தேவைகள், மூலிகைத் தோட்டம் அமைத்தல் உட்பட முக்கிய தேவைகள் பற்றிய கலந்துரையாடல்கள், கருத்துரைகள் என்பன இந்த மாநாட்டில் இடம் பெறவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# ஆறாம் மாத நினைவலைகள்

மண்ணில்
03
-
09
-
1961



விண்ணில்
16
-
11
-
2011

## அமரர் பரஞ்சோதி தேவகுஞ்சரி

மாதங்கள் ஆறு அகன்றாலும்
ஆறாது எம்மன வேதனை - நீ
வேண்டுமென்று தினம் தேடும் எங்கள்
வேதனைகள் தீருவது எப்போது?
உயிராயும், உறவாயும் உலவி
உணர்வுகளைப் பூப்பித்தவள் நீ
பயிராகி நாம் உயரும் நேரம்
பறித்தாரே உனை எமை விட்டு
கண்கள் குளமாக நெஞ்சு கனவாக
கணங்கள் தோறும் உன் உணர்வோடு வாழ்வோம்.

354/7 பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

(C/1557)

மாறா நினைவுடன்
குடும்பத்தினர்.

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகிறது

நல்லைக்கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் வழமைபோன்று 2012ஆம் ஆண்டு வெளியிடப்படவுள்ள 20 ஆவது நல்லைக்குமரன் மலருக்கு தரமான ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் போன்றன துறைசார்ந்த அறிஞர்கள், கல்விமான்கள், சைவப் பெரியார்கள் போன்றவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

அனுப்பப்படும் ஆக்கங்கள் முன்னர் ஒருபோதும் பிரசுரிக்கப்படாதவையாகவும், தெளிவான எழுத்திலும் அல்லது கணனியில் பொறிப்பதற்குகந்த மென்பிரதியாகவும் அமைந்திருப்பது அவசியமாகும்.

அனைத்து விதமான ஆக்கங்களையும் எதிர்வரும் 31.05.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கௌரவ பதிப்பாசிரியர் இல 21/3ஏ இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என முகவரியிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2012" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு சைவசமய விவகாரக்குழு வேண்டிக்கொள்கிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

(நெல்லியடி)

நெல்லியடி மகாத்மா விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்படவுள்ள மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி நாளையும், நாளை மறுதினமும் குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் பங்குகொள்ள விரும்பும் அணிகளை போட்டி நடைபெறும் நாளைய தினமே பதிவுகளை மேற்கொண்டு போட்டிகளில் பங்குகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அசுரன்ஸ் இன்சுரன்ஸ் நிறுவனம் இப்போட்டிக்கு அனுசரணை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (12)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

### அமரர் கனகன் தங்கராசா



கடந்த 29.03.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை சனிக்கிழமை (28.04.2012) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பட்டினசபை வீதி,
சங்கானை.

(C/1454)

சங்கானை ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்க பணியாளர்கள்.

**நல்ல நண்பர்களை பெற வேண்டும். எவ்வளவு சொத்து இருக்கிறது அவருக்கு என்று பார்த்து நண்பனைத் தேடினால் அது நட்பைத் தேடுவதாக அமையாது.**

**- பொன்மொழி.**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நன்றே நம்பி குடிவாழ்க்கை!

உலகம் முழுவதிலும் உள்ள தகுதியும் திறமையும் வாய்ந்த தேர்ச்சி பெற்ற 700 ஆயிரம் விஞ்ஞானிகளுக்குள், 520 ஆயிரம் பேர் நமது வாழ்க்கையை சீர்குலைக்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்களாம். அவர்களுள் வெறும் 180 ஆயிரம் பேர் மட்டுமே மானுட மேன்மையைப் பற்றிய ஆக்கபூர்வமான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது.

விஞ்ஞானிகள் மட்டும் என்றில்லை, பொதுமக்களாகிய நமக்குள்ளும் தெரிந்தோ தெரியாமலோ நிலைமைகளை சீர்குலைக்க உதவிக் கொண்டிருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று தோன்றுகிறது.

இல்லையெனில் நம் கஷ்டங்கள் ஏன் முடிவே இல்லாமல் தொடர வேண்டும்? நமக்கு வேண்டியதைத் தீர்மானித்து அதனைச் சாத்தியப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எண்ணாமல், சாத்தியமில்லாத விருப்பக் கனவுகளிலேயே விடாப்பிடியாக நின்று வாழ்வைச் சீர்குலைக்க நாண்டு கொண்டிருப்பதை வேறு எப்படி விளங்கிக் கொள்வது?

நமது லட்சியங்கள், உள்ளாசைகளுக்காக பெரும்பாலோரைப் பலியிட்டுக் கொள்வதாக நம் பிடிவாதங்கள் தொடரக் கூடாது. நாம் மிகச் சரியானது இதுவே என்று கருதிச் செய்யும் சில செயல்கள் மற்றவர்கள் பலபேரைத் தண்டிப்பதாக அமைந்துவிடும் சாத்தியங்களை நாம் உணர வேண்டும்.

போத்துக்கல் எழுத்தாளர் யொஸே ஸரமாகோ நாவலில், லாசரஸ் மரணமடைந்து கிடக்கும்போது இயேசு அவனை உயிர்ப்பிக்க முயல்கிறார். அப்போது மரியா மக்தலேனா தடுத்து நிறுத்தி, போதும் அவனை உயிர்ப்பித்து இரண்டுமுறை சாகச் செய்யாதீர்கள் என்கிறாள்.

மக்களுக்கு உணர்ச்சியூட்டி, பகையை உயிர்ப்பித்து, இன்னுமொரு தடவை போரிட்டு அழிவதே நமக்கிருக்கும் ஒரே மார்க்கம் என்று காட்ட முனைபவர்கள் இதை யோசிக்க வேண்டும்.

பிழையான தேர்வுகள் பெரும் பீழைகளையே தரும் என்பதை இப்போது எவரையும்விட நன்கறிந்து கொண்டவர்கள் நாம். தொடர்ந்தும் அதையே செய்யக் கூடாது.

அவநம்பிக்கைகளையே வெளியிட்டபடி எதிர்ப்புகளில் நாம் சிதைந்து கொண்டிராமல் அதிலிருந்து வெளிவர வேண்டும். தொடர்ந்து ஏமாற்றமடைந்து கொண்டிருந்தாலும் கூட, இழப்புகளற்ற, அவதிகளும் சாவுகளும் அற்ற இயல்பான ஒரு வாழ்வுக்காக நம்பிக்கையோடு மறுபடி மறுபடி அணுகுவதில் பெரிய பாதகங்கள் இருக்காது.

அவநம்பிக்கையோடு விலகிச் செல்லச் செல்ல அழிவுகளின் புதைசேற்றுக்குள்ளேயே நாம் மூழ்கிக் கொண்டிருக்கும் நிதர்சனத்தை விட அது மேல். சமூகத்தை மோசமான விபத்துகளுக்குத் தள்ளிவிடாமலிருக்கும் பொறுப்புணர்வையும் அது காண்பிக்கும். நலம் பயக்கும் வழியை நாம் தேர்ந்துகொள்ள வேண்டும்.

“ஒன்றே என்னின் ஒன்றே ஆம்
பல என்று உரைக்கின் பலவே ஆம்
அன்றே என்னின் அன்றே ஆம்
ஆமே என்னின் ஆமே ஆம்
இன்றே என்னின் இன்றே ஆம்
உளது என்று உரைக்கின் உளதே ஆம்
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு அம்மா!”

அந்த கம்பனின் பாடல் சொல்வதும் இதைத்தான். ஒன்று என்றால் ஒன்றுதான். பல என்றால் பல. அல்ல என்றால் அல்ல. ஆம் என்றால் ஆம். இல்லை என்றால் இல்லை. உண்டு என்றால் உண்டு. இவற்றில் எது நலம் பயக்குமோ அதை நம்பி நம் வாழ்க்கை. வேறென்ன?

*– ஆசிரியர்*

# கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி குறித்து ஆராய்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் சவால்கள் மற்றும் பின்னடைவு நிலைபற்றி ஆராயும் கூட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் சம காலத்தில் காணப்படும் ஆசிரிய வளப்பற்றாக்குறை, கல்வி நடவடிக்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்றத்துக்குரிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

போர்க்காலத்தையும் விட போருக்குப் பிந்திய காலத்தில் வள அதிகரிப்புச் செய்யப்பட்டிருந்தும் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான காரணங்களை இனங்காணும் விதமாக பல்வேறு கருத்துக்கள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வலயக் கல்விப் பணிப் பாளர் முருகவேல், கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி நிதியத்தின் தலைவரும் வவுனியா மாவட்ட வைத்திய அத்தியட்சகருமான சத்தியமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் பிரதிச் செயலாளரும் கிளிநொச்சி ம.வி அதிபருமான அ.பங்கையற்செல்வன், பச்சிலைப்பள்ளி, கண்டாவளை, கரைச்சி ஆகிய பிரதேச செயலர்கள், கிளிநொச்சி மாவட்ட உளவள வைத்திய அதிகாரி ஜெயராஜா, கிளிநொச்சி மாவட்ட வைத்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மாவட்ட வைத்திய அத்தியட்சகருமான கார்த்திகேயன், ஓய்வு பெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா ஆகியோர் தமது அவதானங்களை முன்வைத்தனர்.

இதனையடுத்து ஆசிரிய வளம் மற்றும் பௌதீக வளங்களை உரிய முறையில் பெற்றுக் கொள்ளவும் அவற்றைப் பகிர்ந்தளிக்கவும் சமூக ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆசிரிய இடமாற்றம் மற்றும் ஆசிரிய உறவைச் சீராக்குதல் போன்ற விடயங்களைப் பற்றிய கலந்துரையாடல் நடைபெற்றது.

## நடைபாதை வியாபாரம் நிறுத்தப்பட்டமைக்கு பாராட்டு

(வவுனியா)

வவுனியா நகர மத்தியில் நீண்ட கால சவாலாகக் காணப்பட்ட நடைபாதை வியாபாரத்தை நிறுத்தியமைக்காக வவுனியா நகரசபைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் உத்தியோகதர்களுக்கு வவுனியா வர்த்தகர் சங்கம் நன்றி தெரிவித்து கடிதம் அனுப்பி வைத்துள்ளது.

இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

எமது நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையில் மிகப்பெரும் சவால்களுக்கும் சிரமங்களுக்கும் மத்தியில் வவுனியா நகரில் நடைபாதை வியாபாரத்தை நிறுத்தியமையை வவுனியா வர்த்தகர் சங்கம் மன மகிழ்வுடன் பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளதுடன், இந் நடவடிக்கைக்கு அயராது பாடுபட்ட நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், சுகாதார பரிசோதகர் உட்பட சிரேஷ்ட வருமான உத்தியோகத்தர், சுகாதார ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(125)

## பாலியல் தொந்தரவு; பல் வைத்தியர் கைது

(கிரிபத்கொட)

இராகம வைத்தியசாலையைச் சேர்ந்த பல் வைத்தியரொருவர் நேற்று முன்தினம் பெண்ணொருவரை பாலியல் தொந்தரவுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலுகம பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையிலிருந்த இவ்வைத்தியர், அப்பெண்ணை நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணிக்கு வைத்தியசாலைக்கு வருமாறு கூறி அவரை பாலியல் தொந்தரவுக்குட்படுத்தியுள்ளார்.

சுமார் ஒரு மணித்தியாலமாக இவ்வைத்தியர் அப்பெண்ணை பாலியல் தொந்தரவுக்குட்படுத்தியுள்ளார். அறையிலிருந்து தப்பிவந்த அப்பெண் கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறித்த வைத்தியர் கைதுசெய்யப்பட்டார்.

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் இலங்கையில் அமைக்க ஆர்வம்

(கொழும்பு)

எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றை இலங்கையில் அமைப்பதற்கு லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (எல்.ஐ.ஓ.சி) ஆர்வம் கொண்டுள்ளது. இலங்கையின் எரிபொருள் சந்தையில் மூன்றில் ஒரு பங்கை அந்நிறுவனம் தக்கவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சப்புகஸ்கந்தையிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மேலதிகமாக மற்றொரு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கு இலங்கை பல வருடங்களாகத் திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில் ல்ங்கா இந்தியன் ஒயில் கம்பனி (எல்.ஐ.ஓ.சி) அனுமதி வழங்கப்பட்டால் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதில் முதலீடு செய்வதற்கு அந்நிறுவனம் ஆர்வம் கொண்டிருப்பதாக அதன் நிர்வாக இயக்குநர் சுரேஷ்குமார் தெரிவித்தார்.

எனினும் இந்நிறுவனம் இலங்கையில் வர்த்தகத்தை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படுவதற்கு எதிர்க்கட்சியினரும் தொழிற் சங்கங்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

2002 - 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த ஐ.தே.மு. அரசாங்கத்தினால், எல்.ஐ.ஓ.சி. நிறுவனம் இலங்கையில் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபட அனுமதியளிக்கப்பட்டது எனவும், அப்போது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அதற்கு ஆட்சேபம் தெரிவித்தது எனவும் ஐ.தே.க. சார்பு தொழிற்சங்கமான தேசிய தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று எண்ணெய் சுத்திகரிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எல்.ஐ.ஓ.சி.க்கு அனுமதிப்பதற்கு அவர்களுக்கு தார்மீக உரிமையில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தேசிய தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆனந்த பாலித கூறினார்.

# உணவகங்களுக்கு தரச்சான்றிதழ்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களுக்கு சுகாதாரப்பகுதியினரால் தரச்சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

66 உணவு கையாளும் நிலையங்களில் 12 உணவு தயாரிக்கும் நிலையங்களும், 7 வெதுப்பகங்களும், 35 சாப்பாட்டுக் கடைகளும், 12 தேநீர்க்கடைகளும் அடங்குகின்றன.

உணவு தயாரிக்கும் நிலையங்களில் 4ஏ, 8பியும், வெதுப்பகங்களில் 3ஏ, 3பி, 1சியும், சாப்பாட்டுக்கடைகளில் 16ஏ, 15பி, 4சியும், தேநீர்க்கடைகளில் 3ஏ, 8பி, 1சியும் என தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளன.

‘சி’ தர நிலையங்களுக்கு இரண்டுவருடகால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இக்காலத்துக்குள் அவைகள் ஏ,பி தரத்திற்கு முன்னேறிவிட வேண்டும். தவறும் பட்சத்தில் சி தர நிலையங்களின் உரிமையாளர்கள் மீது சுகாதாரப்பகுதியினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றை மூடிவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரச்சான்றிதழ்கள் பொதுமக்களின் கண்களுக்குத் தெரியும்படியாக அந்தந்த நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும கேட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இத்தரச் சான்றிதழ்களைக் கவனித்து உணவு கையாளும் நிலையங்களில் தமது உணவுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(137)

# முல்லை மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நெற் செய்கையாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தாம் எதிர்நோக்கி வருகின்ற இடர்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

முள்ளியவளையில் அமைந்துள்ள முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் இணைய மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை இச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது விவசாயிகள் தாம் செய்கை பண்ணும் நெல்லை விற்பனை செய்ய முடியாதுள்ளதாகவும், இதனால் தாம் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், இது விடயம் தொடர்பில் தாம் பல்வேறு தரப்பினருக்கும் தெரியப்படுத்தியிருந்த போதிலும் அவர்கள் பாராமுகமாகவே இருந்ததாகவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன் நெல்லைக் களஞ்சியப்படுத்தக்கூடியதாக உடையார் கட்டுப்பகுதியில் நெற் களஞ்சியமொன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்த அமைச்சர் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களின் போது இறக்குமதி செய்யப்படும் அரிசிக்குப் பதிலாக உள்ளூர் அரிசியை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் உடையார்கட்டுப் பகுதியில் நெற்களஞ்சியம் ஒன்றை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்ததுடன், ஏனைய கோரிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்படுமெனவும் தெரிவித்தார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பத்மானந்தன், ஈ.பி.டி.பியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் கிருபன் ஆகியோர் உடனிருந்தனர்.

# தொலைபேசியைத் திருடியவர் பிணையில் விடுதலை

(திருநெல்வேலி)

புத்தம் புதிய கைத்தொலைபேசி ஒன்றை பெட்டியுடன் திருடியதாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

உரும்பிராய் பகுதியில் உள்ள ஒருவருடைய இப்புதிய கைத்தொலைபேசியாகும். புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த சுப்பன் தர்மராசா என்பவர் இக் கைத் தொலைபேசியை கடந்த மாசி மாதம் முதலாம் திகதி இதன் உரிமையாளரிடம் இருந்து திருடியிருந்தார்.

இதுபற்றி கோப்பாய் பொலிஸாரிடம் முறையிடப்பட்டதையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. கைத்தொலைபேசியும் கைப்பற்றப்பட்டு உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. வழக்கை விசாரித்த யாழ். நதவான் மா.கணேசராசா சந்நேக நபரை 50 ஆயிரம் ரூபாவுக்கான ஒரு ஆட்பிணையில் செல்வதற்கு உத்தரவிட்டார். மீண்டும் வழக்கு அடுத்த மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

(137)

## அறிமுக நிகழ்வு

(முல்லைத்தீவு)

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஒழுங்குபடுத்தலின் கீழ் சிறுவர் கழகங்களை உருவாக்கும் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(04)

## கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

உலக பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு தொழில்சார் பாதுகாப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பாதுகாப்புத் தொடர்பாக பல்வேறு விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்படவுள்ளன. (04)

# விவேகானந்தர் வீதி புனரமைக்கப்படுமா?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவேகானந்தர் கிராமத்தின் பிரதான வீதிப் புனரமைப்புக்காக பறிக்கப்பட்ட கற்கள் அள்ளிச்செல்லப்பட்டுள்ளதால் புனரமைப்பு இடம்பெறாதா என அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏ-9 வீதியிலிருந்து இக்கிராமத்திற்குச் செல்லும் பிரதான வீதியாகக் காணப்படும் இவ்வீதியின் புனரமைப்புக்காக முன்னர் கற்கள் பறிக்கப்பட்டிருந்தன.

கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட இவ்வீதி இதுவரை புனரமைப்பிற்காக எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையில் கற்கள் அள்ளப்பட்டுள்ளமையால் போக்குவரத்து செயற்பாடுகள் தொடர்ந்தும் சிரமத்துடனேயே இடம்பெறுவதாக தெரிவிக்கும் மக்கள், இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்ய வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (77)

# கடன் கிடைக்கவில்லை; ஊழியர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்து வீடமைப்புக் கடனைப்பெற விண்ணப்பித்த யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்கள் நீண்ட காலமாகியும் கடன் கிடைக்காததையிட்டு கவலை வெளியிட்டுள்ளனர்.

அரச திணைக்களங்களின் கீழ் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு இலகு கடன் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் திட்டமொன்றை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்டக் கிளை செயற்படுத்தி வருகின்றது.

இதன் கீழ் யாழ்போதனா வைத்தியசாலை ஊழியர்களையும் இணைத்துக் கொள்ளும்முகமாக யாழ்தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கு கடந்த மாசி மாதம் 9 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் கூட்டமொன்றையும் நடத்தி விண்ணப்பப் படிவங்களையும் பூர்த்தி செய்து பெற்றிருந்தனர். எனினும் இதுவரை அது குறித்து எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் குறித்த கடனுக்குப் புதிய பயனாளிகள் தெரிவும் நிறுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## நடமாடும் சேவை

(பூநகரி)

நாச்சிக்குடா பொலிஸாரின் நடமாடும் சேவையொன்று நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 5 மணிவரை பூநகரி-வேரவில் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நாச்சிக்குடா பொலிஸ் அதிகாரி சஜீவ ரிசாத் பியசேன தலைமையில் நடைபெறும் இச் சேவையில் கண், பல் பரிசோதனை, கண்ணாடி வழங்கல் நோய்களுக்கான மருந்து வழங்குதல், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை வழங்கும் நடவடிக்கை மற்றும் திருமணம், பிறப்பு, இறப்பு பதிவு போன்ற சேவைகள் வழங்கப்படவுள்ளன. பொது மக்களை இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (149)

# ஜி.ஐ.இசட் நிறுவனப் பிரதிநிதிகள் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஜி.ஐ.இசட் நிறுவனப் பிரதிநிதிகள் யாழ்.மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்நிறுவனம் அபிவிருத்தி சார்ந்த அவசர இடைநிலை உதவி என்ற செயற்திட்டத்தினை உலகின் பல பாகங்களிலும் முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தின் உட்கட்டுமானம் சமூக சேவைகளான கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய உற்பத்தி ஆகியவற்றில் விரைவான பொருத்தமான மாற்றத்தினை ஏற்படுத்தி வரும் நிலையில், இந்நிறுவனப் பிரதிநிதிகள் இலங்கைக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் மேற்படி நிறுவனத்தின் அபிவிருத்தி சார்ந்த அவசர இடைநிலை உதவிச் செயற்றிட்டத்தின் சர்வதேச தலைவர் டானியல் பசின் மற்றும் அவரது குழுவினர், ஆளுநரைக் கடந்த சனிக்கிழமை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதில் வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவனத்தால் மாணவர்களுக்கிடையே போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே சகல வலயக்கல்வி அலுவலகங்களூடாக போட்டிகளை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது.

இப்போட்டியில் தரம் 6,7,8 இல் கற்போர் கீழ்ப்பிரிவாகவும் தரம் 9,10,11 இல் கற்போர் மத்திய பிரிவாகவும் உயர்தரம் வகுப்பில் கற்போர் மேற்பிரிவாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரிவு ரீதியாக முறையே "ஒளிதருவாள் யாழ்.ஜெய்ப்பூர் அன்னை", "மாற்றுவலு தந்தெமக்கு வளமூட்டும் ஜெய்ப்பூர்", "புதுவாழ்வு தந்திடுவாள் ஜெய்ப்பூர் அன்னையவள்" போன்ற தலைப்புக்களின் கீழ் கவிதைப் போட்டிகளும், வலுவிழந்தோர்க்கு மறுவாழ்வின் ஒளி ஜெய்ப்பூர் (250 சொற்களுக்கு குறையாமல்), "ஜெய்ப்பூர் அன்னையின் அரவணைப்பில் மலர்ந்து வரும் மாற்றுவலு", (350 சொற்களுக்கு குறையாமல்) "வலுவிழந்து நின்றவர்க்கு வலுச்சேர்த்திடும் ஜெய்ப்பூர்" போன்ற தலைப்புகளில் கட்டுரைப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

மேலும் வலுவின்மை வாழ்வின் முடிவல்ல,வலுவும் வாழ்வும் இழந்தோர்க்கு ஒளியேற்றி வழிகாட்டும் தாயாக யாழ்.ஜெய்ப்பூர் அன்னை, வலுவிழந்தோர் வாழ்வின் ஒளியேற்றும் பணியில ஜெய்ப்பூரின் வெள்ளி விழாத் தடங்கள் ஆகிய தலைப்புக்களின் கீழ் பேச்சுப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் கோட்ட வலய மட்டங்களில் நடத்தப்படவுள்ளதுடன், கோட்டமட்டத்தில் வெற்றி பெற்ற முதல் 3 இடங்களைப்பெற்ற மாணவர்களின் விபரங்களை எதிர்வரும் மே மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த வலயக்கல்வி அலுவலகங்கள் ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். பின்னர் மீள்பரிசீலனை செய்யப்பட்டு தகுதியானவர்கள் மூவர் தெரிவு செய்யப்படுவர். அத்துடன் போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக வெளியிடப்படும் என நிறுவனத்தலைவர் வைத்திய கலாநிதி திருமதி ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

# யாழ். மாநரக சபைக்கு ஸ்ரியர் றோலர் இயந்திரம்



உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினால யாழ்.மாநகர சபை ஸ்ரியர் றோலர் இயந்திரமொன்று வழங்கப்பட்டுள்ளது. யாழ்.மாநகரில் திண்மக் கழிவு முகாமைத்துவ நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இயந்திரங்களை வழங்குமாறு உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுக்கு யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா விடுத்த கோரிக்கைக்கு அமையவே மேற்படி அமைச்சினால் இவ்வியந்திரம் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை கொம்ரேலஸ் அரைக்கும் இயந்திரம், துண்டாக்கும் இயந்திரம் விரைவில் வழங்கப்படவுள்ளதாக மாநகர சபைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்திக்கு நூலகப்பயன்பாடு மிகவும் அவசியமானது

## -வல்வெட்டித்துறை நகர சபைத்தலைவர்-

(யாழ்ப்பாணம்)

மாணவர்களை ஆக்கத்திறன் சிந்தனையுள்ளவர்ளாகவும்,தேடியறியும் மனப்பக்குவம் உள்ளவர்களாகவும் உருவாக்குவதில் கையெழுத்துச் சஞ்சிகை பிரதானமானதொரு வகிபங்கை ஆற்றுகிறது என வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் நடராஜா அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

நூலக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் மாணவர்களின் ஆக்கத்திறனையும் வாசிப்புத் திறனையும் மேம்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகை உருவாக்கும் போட்டியின் முடிவுகளை அறிவிக்கும் பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்;

மாணவர்களை நூலகப் பயன்பாட்டினூடாக கையெழுத்துச் சஞ்சிகை தயாரிப்பில் ஈடுபடுத்துவதனூடாகவே அவர்களது கற்கும் ஆற்றல், விவாதிக்கும் திறன்,சித்திரம் வரைதல்,புத்தாக்கம், உறுப்பமைய எழுதுதல்,கூட்டுப் பொறுப்பு என்பன வளர்த்தெடுக்கப்படும். இதற்குப் பாடசாலை அதிபர்கள் தமது மாணவர்களை நூலக அபிவிருத்தியின் கீழ் வகுப்பு ரீதியாக கையெழுத்துச் சஞ்சிகைகளை உருவாக்குவதற்கான வழிகாட்டல்களையும்,ஊக்குவிப்பையும் வழங்க முன்வர வேண்டும என நகராட்சி மன்றத்திற்குட்பட்ட பாடசாலைகளின் அதிபர்களைக் கேட்டுக் கொண்டார்.

இப்போட்டிகளில் மேற்பிரிவில் யா/வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி மாணவர்களால் தயாரிக்கப்பட்ட "புதிய தாரகை" என்ற சஞ்சிகை முதலாம் இடத்தையும், மத்தியபிரிவில் யா/வல்வை சிவகுருவித்தியாலய மாணவர்களால தயாரிக்கப்பட்ட "மலரும் மொட்டுக்கள்" என்ற சஞ்சிகை முதலாம் இடத்தையும்,இரண்டாம் இடத்தை யா/கம்பர்மலை வித்தியாலய மாணவர்களால் தயாரிக்கப்பட்ட "அரும்பு" சஞ்சிகையும் பெற்றுக்கொண்டன.

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையால் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

(முல்லைத்தீவு)

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சிறுவர் நிதியத்துடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவில தாய், தந்தையரை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 125 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் வைத்து உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் திருமதி அனோமா திஸநாயக்க, முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண தொழில்நுட்ப இணைப்பாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிதியத்தினால் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்திலும் இவ்வாறான 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. இதேவேளை இன்று யாழ். மாவட்டத்தில் உள்ள 100 மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. (04)



காரைநகர் பிரதேச வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

கட்டடத்திற்கான பெயர்ப்பலகையை வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மற்றும் வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஆகியோர் இணைந்து திரைநீக்கம் செய்து வைப்பதனைக் காணலாம். (50)

## உணவுச் செயற்திட்ட மீளாய்வு செயலமர்வு

(பருத்தித்துறை)

பாடசாலை உணவுச் செயற்திட்ட மீளாய்வுச் செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 9 மணிக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது.

வலயத்தின் பாடசாலை உணவுச் செயற்றிட்ட இணைப்பாளர், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் அபிவிருத்தி உதவியாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என வடமாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் தொண்டர்களின் விபரம், சமயலறைத் தேவை, தேவையான பாத்திரங்களின் விபரம், சமயலறைத்திருத்தம், களஞ்சியறைத்தேவை முதலியவற்றை செயலமர்வுக்கு சமுகமளிக்கும் போது சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (109)

## தொடர் சொற்பொழிவு

(திருநெல்வேலி)

கந்தர்மடம் - பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞானவைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவப் பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை பகல் 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவ காலங்களில் தினமும் மாலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரை தெய்வீகப் பேருரையாளர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தொடர் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (60)

## முரசின் இன்றைய பலன்

(27.04.2012 –வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 15 ஆம் திகதி. ஷஷ்டி முன்னிரவு 10.35 வரை. நட்சத்திரம் திருவாதிரை முற்பகல் 11 .36 வரை. சித்தயோகம். ஷஷ்டி விரதம். கரிநாள். இராகுகாலம் 10.28 - 11.58 வரை. சுபநேரம் 5.58 - 7.28 வரை. எமகண்டம் 2.58 - 4.28 வரை. குளிகை காலம் 7.28 - 8.58 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | குழப்ப நிலை, பணியில் முன்னேறறம், வர்த்தகத்தில் இலாபம், பணப்பயிர்கள் வசூல் தரும். |
| ரிஷபம் | வெற்றிக்களிப்பு, பணியிடமாற்றம், மானியம் கிடைக்கும். |
| மிதுனம் | தான தர்மம் செய்வீர், பணிச்சுமை அதிகரிக்கும், திடீர் இடமாற்றம், பணப்பயிரால் வருவாய். |
| கடகம் | பணவரவுகள், கவலை அதிகரிப்பு, அன்னியரால நன்மை, விரும்பிய இடமாற்றம், வெற்றிகள். |
| சிம்மம் | தனலாபம், பணப்பரிமாற்றத்தில் இழுபறி, அவதூறு கேட்டல், மனத்தெளிவு குன்றும். |
| கன்னி | சீறிச்சினத்தல், வர்த்தகத்தில் கவனம், எதிர்பாராத இடமாற்றம், பணப்பயிரில் வருமானம். |
| துலாம் | மனத்திருப்தி, பூர்வீக சொத்தில் அனுகூலம், வெளிநாடு செல்லும் வாய்ப்பு, தடைகள் அகலும். |
| விருச்சிகம் | சந்திராட்டமம் , சரளமான பணப் புழக்கம், சேமிப்பு உயரும், அவசரம் ஆபததைத்தரும். |
| தனுசு | வெற்றிகள், உறவினர் ஆதரவு, வேலை வாய்ப்பு, உடன்பணிபுரிவோர் ஆதரவு. |
| மகரம் | முற்கோபம், புத்திர வழியால் சுபகாரியம், கூட்டுத்தொழிலில் மனஸ்தாபம், பணவரவுகள். |
| கும்பம் | சந்திப்புக்கள், எதிலும் வெற்றி, பதவியுயர்வு, கணவன் மனைவிக்கு இடையில் ஒற்றுமை. |
| மீனம் | உதவிகள் கிடைத்தல், வாக்குவாதம் தவிர்க்கவும், வெளிநாடு செல்லும் வாய்ப்பு, தனலாபம். |

# தென் பகுதியிலிருந்து வரும் வாகனங்கள் வீதி நடைமுறைகளை பின்பற்றுவதில்லை

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் தற்போது வாகன நெரிசல்கள் பரவலாக அதிகரித்துள்ளதால் நாளாந்தம் பொதுமக்கள் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் பயணம் செய்ய வேண்டியுள்ளதுடன் விபத்துக்களும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாளாந்தம் தென் பகுதியிலிருந்து அதிகளவான வாகனங்கள் பல்வேறு செயற்பாடுகளுக்காக வருகை தருவதுடன் சுற்றுலாப்பயணிகளின் வருகையும் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நிலையில் வர்த்தக வாகனங்கள், சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் குறிப்பாக தனியார் பேருந்துகள் யாழில் வீதி நடைமுறைகளை பின்பற்றுவதில்லை என பொதுமக்களால தெரிவிக்கப்படுகிறது.

வீதியின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைத்தல், வாகனப்போக்குவரத்து இல்லாத சிறு வீதிகளூடாக செல்லுதல் கட்டுப்பாடின்றி வேகமாகச் செல்லுதல் போன்ற பல செயற்பாடுகளாலேயே விபத்துக்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

நல்லூர் ஆலயச்சூழலில் இவ்வாறு சுற்றுலாப்பயணிகளின் பேருந்துகள், சிறிய வாகனங்கள் தாறுமாறாக நிறுத்தப்படுவதால் அப்பகுதியூடாக பாதசாரிகள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் இறங்கிச்செல்லவேண்டிய நிலை காணப்படுகிறது.

மக்கள் அதிகம் பயணம் செய்யும் பிரதான வீதிகளில் வீதிநடைமுறைகளை பின்பற்றி மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தாமல் போக்குவரத்தை மேற்கொள்ள யாழ்.போக்குவரத்து பொலிஸார் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும். இதன்மூலமே விபத்துகள் இடம் பெறுவதை தடுக்க முடியும் என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (எஸ்)

## பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பகிரங்கசேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பருத்தித்துறை பிரதேசசங்கத்தின் இரண்டாவது ஆண்டுப்பொதுக்கூட்டம் பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி சு.பா.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேசசெயலர் இ.த.ஜெயசீலன் கலந்துகொண்டதுடன், சிறப்பு விருந்தினரர்களாக பருத்தித்துறை உதவிப்பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், கணக்காளர் கி.யோகேந்திரன் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய யாழ்.மாவட்ட தலைவர் வி.சிறிசக்திவேல் செயலாளர். பொ.கமலநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (01)

## புத்தகங்கள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

வணபிதா மேர்வின் பெனாணடோவினால் யாழ்.பொதுசன நூலகத்திற்கு ஒரு தொகுதி புத்தகங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பொதுநூலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வணபிதா மேர்வின் பெனாண்டோ 70 பெட்டிகள் கொண்ட 3ஆயிரம் புத்தகங்களை யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சௌவுந்தரநாயகம் ஆண்டகை, குருக்கள், பிரதம நூலகர் திருமதி கருணாகரன், நூலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# விலை மதிக்க முடியாத சொத்து

(லண்டன்)

கிரிக்கெட்டின் கடவுள் என்று இரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர், கையெழுத்திட்டு தனது மகளுக்காக அளித்த கிரிக்கெட் துடுப்பை விலைமதிக்க முடியாத ஒரு சொத்தாகக் கருதுவதாக இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் பெருமையாக கூறியுள்ளார்.

லண்டனில் இந்தியாவின் பழமைவாத நண்பர்கள் என்ற அமைப்பின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட அவர் கூறியதாவது,

2010 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு நான் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது, இந்தியாவின் மிக பெரிய துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் ஒரு கிரிக்கெட் துடுப்பை அவரது கையெழுத்திட்டு, எனது மகளுக்காக தந்தார்.

அதை விலைமதிக்க முடியாத ஒரு சொத்தாக நான் கருதுகின்றேன்.

இதனையடுத்து, அந்த துடுப்பைக்கொண்டு என்னுடைய மனைவி கிரிக்கெட் விளையாடினார். இந்த துடுப்பை நான் மிகவும் மதிக்கிறேன், அது என்னுடைய மிகப்பெரிய சொத்து என்று கூறுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். எனவே, இனி இதில் விளையாட வேண்டாம் என அவர் தனது மனைவியிடம் தெரிவித்தார்.



# பாரபட்சம்

(புதுடில்லி)

சீனாவில் நடந்த ஆசிய பட்மின்ரன் சம்பியன்ஷிப் தொடரில் நடுவர்கள் பாரபட்சமாக நடந்து கொண்டதாக இந்திய வீராங்கனை சாய்னா நேவல் புகார் தெரிவித்துள்ளார்.

சீனாவில் உள்ள குயிங்டாவில்ஆசிய சாம்பியன்ஷிப் தொடர் நடந்தது. இத் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாம் சுற் றில், சாய்னா, சீனாவின் இயோ ஜியாவிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். இது குறித்து அவர் கூறுகையில்,

'சில நேரங்களில் சீன நடுவர்கள், அந்த நாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு சாதகமாக தீர்ப்பு அளிக்கின்றனர். இது, மற்றவர்களுக்கு பாதிப்பினை உண்டாக்குகிறது என்றார்.

# அதிகரித்தது பரிசுத் தொகை

(விம்பிள்டன்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மிக உயரியதான விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி ஜுன் 25ஆம் திகதி முதல் ஜுலை 8ஆம் திகதி வரை லண்டனில் நடக்கிறது. இந்த ஆண்டுக்கான போட்டி பரிசுத்தொகை வழக்கம் போல் உயர்த்தப்பட்டுள்ளது. இதன் படிமொத்த பரிசுத்தொகை ரூ.136 கோடி ஆகும். இது கடந்த ஆண்டை விட 10 சதவீதம் அதிகமாகும். ஆண்கள் மற்றும் பெண்கள் ஒற்றையர் பிரிவில் பட்டம் வெல்வோருக்கு தலா ரூ.93/4 கோடி பரிசாக வழங்கப்படும். தரவரிசையில் பின்தங்கிய வீரர், வீராங்கனைகளை பயன் அடையும் வகையில், ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்றுக்கு முன்பாக தோல்வி கண்டு வெளியேறும் வீரர்களுக்கு கிடைக்கும் பரிசுத்தொகையிலும் 13 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.



# தலைமைப் பொறுப்பு 'பரிசீலிக்கத் தயார்

(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டால் அதைப் பற்றிச் பரிசீலிப்பதற்கு தயாராக இருக்கிறேன். பாகிஸ்தான் அணியைமீண்டும் தலைமை தாங்கும் எண்ணத்தை இன்னமும்கை விட்டு விடவில்லை என அவ் அணி யின் மூத்த துடுப்பாட்ட வீரர் யுனிஸ்கான் தெரிவித்துள்ளார். அணித்தலைமைப் பொறுப்பு வழங்கப்பட்டால் அதைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். எனக்கு முக்கியமானவர்களுடனும், என்னுடன் நெருக்கமானவர்களுடனும் அதுபற்றிக் கலந்துரையாடத் தயாராக இருக்கிறேன். தேசிய அணியை வழிநடத்துவது எப்போதும் கௌரவமானது.

நான் அணித்தலைமைப் பதவியை நோக்கிச் செயற்பட வில்லை. அத்தோடு எந்த அணித்தலைவரின் கீழும் போட்டிகளில் பங்குபற்றத் தயாராக உள்ளேன் எனவும் தெரிவித்தார்.

# தொடர்ந்தும் தலைவர்

(லண்டன்)

டெஸ்ட் போட்டிகளுக்கான இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவராக தொடர்ந்தும் அன்ட்ரூ ஸ்ரோர்ஸே செயற்பட வேண்டும். அதனையே நான் விரும்புகின்றேன் என அந்த அணியின் முன்னாள் தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

அன்ட்ரூ ஸ்ரோர்ஸ் தொடர்பான விமர்சனங்களை ஏற்றுக்கொள்ள முடியாது.

எனினும் ஸ்ரோர்ஸ் துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்ற கருத்துக்கு நான் சார்பாக இருப்பேன் எனத் தெரிவித்தார்.

அன்ட்ரூ ஸ்ரோர்ஸ் குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்கு மத்தியில் மைக்கல் வோன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



# விலகினார் ஜோகோவிச்

(பெல்கிரேட்)

சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் முதல்நிலை வீரரான சேர்பியாவின் ஜோகோவிச் அப்போட்டியில் இருந்து விலகியுள்ளார்

இதுதொடர்பாக இணையத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், மாட்ரிஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ்போட்டி மே மாதம் ஆரம்பமாகவுள்ளது. அதற்கு முன்னதாக ஓய்வு தேவைப்படுவதால் சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் விளையாடுவதில்லை என முடிவு செய்துள்ளேன். இது கடினமான முடிவுதான். இருப்பினும் என்னால் ரென்னிஸ் விளையாடாமலோ, ரென்னிஸைப் பற்றி நினைக்காமலோ இருக்க முடியாது.

நடால் சிறந்த வீரர் அவரிடம் தோல்வி கண்டதில் கவலையில்லை. தொடர்ந்து எல்லா ஆட்டங்களில் வெற்றிபெறுவது சுலபமாக காரியம் இல்லை. என்று குறிப்பிட்டுள்ளார்.

சேர்பிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி வரும் 30ஆம் திகதி முதல் மே 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியினால் நடத்தப்படும் சி. தனபாலன் ஞாபகார்த்த அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஓவர்கள் கிரிக்கெட் போட்டி இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ளது.

ஐந்தாவது ஆண்டாக இடம்பெறும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி, யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

ஏ.பி.சி.டி என நான்கு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டு இப்போட்டி இடம்பெறவுள்ளது.

12 பாடசாலை அணிகள் பங்குகொள்ளும் இப்போட்டித் தொடரின் காலிறுதி மற்றும் அரையிறுதி ஆட்டங்கள் வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ். இந்துக் கல்லூரி, சிதரம்பரக் கல்லூரி, சென் ஜோன்ஸ் கல்லூரி சிவப்பு, நபில் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, சென் ஜோன்ஸ் கறுப்பு, ஹாட்லிக் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஸ்ரான்லிக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய 12 அணிகள் இப்போட்டியில் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மும்பை இன்டியன்ஸ் "த்ரில்" வெற்றி

இந்தியன் பிறீமியர் லீக்கில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் மும்பை இன்டியன்ஸ் அணி வெற்றி பெற்றது.

மும்பை இன்டியன்ஸ் அணிக்கும், கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு மிடையில் இடம்பெற்ற இப்போட்டியில் மும்பை இன்டியன்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் எதிர்பாராத வெற்றியைப் பெற்றது.

சண்டிகாரில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவன்பஞ்சாப் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இறுதிநேரத்தில்அற்புதமாக ஆடிய அணித் தலைவர் டேவிட் ஹசி மற்றும் டேவிட் மில்லர் ஆகியோர் அதிக ஓட்டங்களைக் குவித்தனர். இதில் டேவிட் ஹசி ஆட்டமிழக்காமல் 40 பந்துகளில் 68 ஓட்டங்களையும், டேவிட் மில்லர் 17 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மும்பை இன்டியன்ஸ் அணி 19.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இறுதி இரண்டு ஓவர்களில் மும்பை இன்டியன்ஸ் அணி 32 ஓட்டங்களை வேண்டி நின்ற போதிலும், 19ஆவது ஓவரை வீசிய பியூஸ் சாவ்லாவின் ஓவரில் 27 ஓட்டங்கள் பெறப்பட்டன. இதில் ரோகித் சர்மா 30 பந்துகளில் 50 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு 17 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பர்விந்தர் அவானா 4 ஓவர்களில் 39 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். போட்டியின் நாயகனாக மும்பை இன்டியன்ஸ் அணியின் அம்பத்தி ராயுடு தெரிவானார்.

# வெளியேறியது பார்சிலோனா

சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் அரையிறுதியில் நடப்பு சம்பியன் பார்சிலோனா அணி அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறியது.

பார்சிலோனா, செல்சீ அணிகளிடையே நேற்று முன்தினம் நடந்த 2ஆம் கட்ட அரையிறுதி ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. முதல் கட்ட அரை இறுதியில் செல்சி அணி 1-0 என வென்றிருந்ததால், 3-2 என்ற கணக்கில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.



# அவுஸ்ரேலியா முன்னிலை

(டொமினிகா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான டொமினிகா டெஸ்ட் போட்டியில் 310 ஓட்டங்களால் அவுஸ்ரேலிய அணி முன்னிலை வகிக்கின்றது.

மேற்கிந்தியத்தீவு, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசிப் போட்டி டொமினிகாவில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 218 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் சந்தர்போல் 68, ராம்போல் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லயன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். 110 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடி வரும் அவுஸ்ரேலிய அணி மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, ஆறு விக்கெட்டுக்களை இழந்து 200 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் முன்னாள் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் 57, கௌன் 55 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் றோச், கில்லிபோட் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். நான்கு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 310 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கின்றனமை குறிப்பிடத்தக்கது. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 328.

# பொண்டிங் மீதான விமர்சனம் தவறானவை

அவுஸ்ரேலிய அணியின் மூத்த துடுப்பாட்ட வீரரும் முன்னாள் தலைவருமான ரிக்கி பொண்டிங் மீதான விமர்சனங்கள் தவறானவை. அவை தேவையற்றவை எனவும் அவுஸ்ரேலிய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் எட் கொவான் தெரிவித்துள்ளார். பொண்டிங் ஆட்டமிழந்த விதத்தை நம்ப முடியாதவாறு இருந்ததது. எனினும் நீண்ட காலத்திற்கு கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் போது வெவ்வேறு விதமாக ஆட்டமிழக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்கிறேன். ரிக்கி பொண்டிங் மூன்றாவது டெஸ்டின் இரண்டாவது மிகச் சிறப்பாக ஆடியிருந்தார். அவர் ஆட்டமிழந்ததை அடுத்து சில ஊடகவியலாளர்களின் தேவையற்ற விமர்சனங்களுக்கு ஆளாகக் கூடும். ரிக்கிபொண்டிங் பழிச்சொல்லுக்கு ஆளாகக் கூடும் என்ற போதிலும், துடுப்பாட்டத்திற்கு கடினமான ஆடுகளங்களில் அவர் எவ்வாறு சிறப்பாக ஆடினார் என்பதை அப்போட்டியைப் பார்த்தவர்கள் புரிந்து கொள்வார்கள். இருவரும் ஒரே உள்ளூர் அணிக்காக (தஸ்மேனியா) விளையாடுவது அதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அவர் எப்போதும் எனக்கு மிகுந்த உதவிகளை வழங்கியிருந்தார்., மறுபுறத்தில் ஆடும் துடுப்பாட்ட வீரரோடு மிகச்சிறந்த உறவைப் பேணினால் துடுப்பெடுத்தாடுவது இலகுவாக அமையும் எனவும் தெரிவித்தார்.

# யாழ். பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நட்புறவை ஏற்படுத்தும் நோக்கில் யாழ். பொலிஸ் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 2012 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டு விழா விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். முன்னீஸ்வரன் கோவிலுக்கு முன்பாக உள்ள மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.



யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, வடபிராந்திய சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் ஆண்கள், பெண்களுக்கான, மரதன், சைக்கிளோட்டம், முச்சக்கர வண்டிப் போட்டி, மாற்று வலுவுள்ளோருக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி, சாக்கோட்டம், தயிர் முட்டி உடைத்தல், கிறிஸ்மரம் ஏறுதல், முட்டை எறிதல், தலையணைச் சண்டை, தேசிக்காய் கரண்டி ஓட்டம், யானைக்கு கண் வைத்தல், அழகு ராணிப் போட்டி, விநோத உடைப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகள் நடைபெற்றன.

ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் இராசரத்தினம் உதயசாந்தன், நடராசா தனீஸ், துரைராசா றஜிமி ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றதுடன், பெண்கள் பிரிவில் குமாரராசா யனுசா, றஸ்வரி மணிலா, இராமச்சந்திரன் யினாசா ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஜெனாத் கிங்னன், றோசப்பிள்ளை வரோசன், செல்வநாயகம் சண்முகநாதன் ஆகியோரும் பெண்கள் பிரிவில் நாகேஸ்வரி சுமதி, லோகேந்திரதாய் மங்கையா வாரிங்கு, மரியதாஸ் தயாபரன் ஆகியோரும் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

முச்சக்கர வண்டிப் போட்டியில் எஸ்.இராஜேஸ்வரன், அஸ்மட், லதீஸ்கண்ணன் ஆகியோரும் மாற்று வலுவுள்ளோருக்கான சைக்கிளோட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் யோ.சஞீவன், ந.சோதிலிங்கம், யோ.வசந்தகுமார் ஆகியோரும், பெண்கள் பிரிவில் பொ.ஞானசௌந்தரி, க.கல்பனா,சி.சுதா ஆகியோரும் சாக்கோட்டம் போட்டியில் ஆண்கள் பிரிவில் உ.சுயோதரன், ஜே.ஜோஸ்கரன்,த.தனுசன் ஆகியோரும் பெண்கள் பிரிவில் கு.யனுசா, செ.ஜசிதா, ஜெ.நிதர்சனி ஆகியோரும் முட்டி உடைத்தல் போட்டியில் கோ.சுதர்சனும் 15 வயதுக்கு கீழ்ப் பிரிவில் சைக்கிள் ஓட்டப்போட்டியில் மு.ஜசோதரன், இ.தீலிப், கி.விஜிஸ்தரன், க.றஜிந்தன் ஆகியோரும் முட்டை உடைத்தல் போட்டியில் கு.ஜனகா, ச.வேன்சன் ஆகியோரும் தலையணை சண்டையில் பா.றெடிசன், கி.தோப்பியஸ் ஆகியோரும் தேசிக்காய் கரண்டியில் அ.துமேசியா, லோ.லோஜினி ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர்.

அழகு ராணிப் போட்டியில் கணநாதன் டில்மினி, குமாரராசா யானுசா இரண்டாம் இடத்தையும், ஜெகதீஸ்வரன் சதாயினி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, இராணுவத்தினருக்கும் பொலிஸாருக்கும் இடையே நடைபெற்ற கரப்பந்தாட்டம் மற்றும் கயிறிழுத்தல் போட்டிகளில் இராணுவ அணி வெற்றி பெற்றது. தொடர்ந்து வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா, 512ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி அஜித் பல்லாவல, ஏ.எஸ். பி.ரணவீர, மேஜர் சுமதி ஜெயசிங்க உட்பட பலர் கலந்து கொண்டனர். (சி)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட மென்பந்து கிரிக்கெட் யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மற்றும் யாழ். ஹாட்லிக் கல்லூரியிலும், மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நாளை மறுதினம் முதல் நடைபெறவுள்ளது.

19 வயது பிரிவு ஆண்; பெண் இருபாலாருக்குமிடையில் இப்போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஹொல்சிம் கால்பந்தாட்டம் வட-கிழக்கு அணிகளும் களத்தில்

(கொழும்பு)

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் "ஹொல்சிம் எவ்.ஏ. கிண்ண 2012" சுற்றுப்போட்டியில் வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த 139 கழகங்கள் பங்குபற்றுகின்றன.

ஆரம்பச் சுற்றுப்போட்டி கடந்த 22ஆம் திகதி ஆரம்பமாகியது.

ஆரம்பச் சுற்றுப்போட்டிகள் நொக் அவுட் (விலக்கல்) அடிப்படையில் நடைபெறும். 8 அணிகள் முன் கால் இறுதிச் சுற்றுக்கு ஏற்கனவே தகுதி பெற்றுள்ளன. ரட்ணம், இலங்கை கடற்படை, புளூ ஸ்டார், நந்திமித்ர, இலங்கை பொலிஸ், இலங்கை இராணுவம், நியூ யங், டொன் பொஸ்கோ ஆகியனவே ஏற்கனவே தகுதிபெற்ற கழகங்களாகும். அவற்றுடன் ஆரம்பச் சுற்றின் அடிப்படையில் மேலும் 8 அணிகள் முன் கால் இறுதிச் சுற்றுக்கு தெரிவுசெய்யப்படும். இறுதியாக நடைபெற்ற போட்டிகளில் 2009இல் ரட்ணம் கழகமும் 2010 ஆம் ஆண்டு கடற்படை கழகமும், 2011 ஆம் ஆண்டு இலங்கை இராணுவக் கழகமும் சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

## இறுதிப் போட்டியில் யாழ்.ஸ்ரார் அணி

யாழ். பல்கலைக்கழகத்தின் விளையாட்டு அழையினால் நடத்தப்பட்டு வரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ். ஸ்ரார் அணி தகுதி பெறறுள்ளது.கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். ஸ்ரார் அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் யாழ். ஸ்ரார் அணி ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தியது. முற்பாதி ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்திலும், 18ஆவது நிமிடத்திலும் மிகச் சிறப்பான கோல்களைப் போட்ட யாழ். ஸ்ரார் வீரர் ஜனார்த்தனா அணியை முன்னிலைப்படுத்தினார். பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளுமே கோல் போடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டபோதும் பின்கள வீரர்களின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கோல் போடும் வாய்ப்பு தடுக்கப்பட்டது. இறுதியில் யாழ். ஸ்ரார் அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. மற்றுமொரு அரையிறுதிப் போட்டி இடம்பெறவுள்ள அதேவேளை, இறுதிப் போட்டி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (12)




நெல்லியடி பொலிஸார் மற்றும் வர்த்தகர்களால் நடத்தப்பட்ட பாரம்பரிய விளையாட்டின்போது தாச்சி மற்றும் கயிறு இழுத்தல் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்ற மகாத்மா அணி வீரர்களைக் காணலாம். (12)

## பல்கலை ஒரு நாள் கிரிக்கெட் கிண்ணம் வென்றது ஜொனியன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் கிண்ணத்தை ஜொனியன்ஸ் அணி முதல் முறையாகக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினரால் நடாத்தப்பட்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.



இதில் யாழ். பல்கலைக்கழக அணியும், ஜொனியன்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய யாழ். பல்கலைக்கழக அணி தசரிதனின் சிறப்பான சத்த்துடன் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். பல்கலைக் கழக அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தசரிதன் மூன்று சிக்ஸர்கள், 12 பவுண்டரிகள் அடங்கலாக 109 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் செல்ரன் 69, ஜனார்த்தனன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 49 ஓட்டங்கள் ஜொனியன்ஸ் அணியால் விட்டுக் கொடுக்கப்பட்டது. பந்து வீச்சில் ரதீஸ்குமார், லவேந்திரா தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 282 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஜொனியன்ஸ் அணி களமிறங்கியது. முன்னிலை துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பான, நிதானமான ஆட்டத்தின் மூலம் ஜொனியன்ஸ் அணி வெற்றியிலக்கை அடைந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது. இறுதியில் 48.2 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஆட்டமிழக்காது டக்சன் 48 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் லவேந்திரா 41, குமணன் 36, மயூரன் 32, அகிலன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக யாழ். பல்கலைக்கழக அணியால் 52 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டது. பந்து வீச்சில் விதுபாலா நான்கு, ஜனார்த்தனன், விதுரன், தசரிதன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இப்போட்டியின் ஆட்ட நாயகனாகவும், தொடரின் சிறந்த களத்தடுப்பாளராகவும் ஜொனியன்ஸ் அணியைச் சேர்ந்த லவேந்திரா தெரிவானார். அத்துடன் தொடரின் நாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீராகவும் யாழ். பல்கலைக் கழக அணியைச் சேர்ந்த ஆர். தசரிதன் தெரிவானார். மற்றும் சிறந்த பந்து வீச்சாளராக யாழ். பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த வி. விதுபாலா தெரிவானார்.

இதேவளை, இப்போட்டித் தொடரில் முதன் முறையாக ஜொனியன்ஸ் அணி கிண்ணம் வென்றதுடன் இ[illegible]த வருடம் கைப்பற்றிய முதல் கிண்ணமாகவும் இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

# மின் புத்தகப் புழுக்கள்

- ரவி நடராஜன் -

**இப்படியா** புரியாத தலைப்பில் கட்டுரை? புத்தகப் புழுக்களை நாம் அறிவோம். அதென்ன மின்?

முதலில், இன்னும் மின் புத்தகக் கருவிகள் தமிழில் படிக்கத் தோதாக வரவில்லை. இக்கட்டுரையில் விவாதிக்க இருக்கும் பெரும்பாலான சமூக ஆச்சரியங்கள் மேலை நாடுகளில் ஆங்கில மின் புத்தகங்கள் படிக்கும் புழுக்களின் அனுபவங்கள். இவை எல்லா மொழிகளுக்கும் பொருந்தும். எதிர்காலத்தில் தமிழில் படிப்பவர்களுக்கும் இந்த பிரச்சினைகள் வரக்கூடும் என்று தமிழ் கூறும் நல்லுலகிற்கு இப்பொழுதே சொல்லத் துணிந்து விட்டோம்!

இன்று பல அம்சங்களுடனும், பல சைஸ்களிலும் மின் புத்தகக் கருவிகள் வரத் தொடங்கி விட்டன. விலையும் சரியத் தொடங்கி விட்டது. சில மின் புத்தகக் கருவிகளை 100 டொலரை விட குறைவாக விற்கத் தொடங்கி விட்டார்கள். கருவிகள் பற்றி அலசு முன் எதை நாம் மின் புத்தகக் கருவி என்று சொல்ல வருகிறோம் என்பதைத் தெளிவாக்க வேண்டும்.

விடாப்பிடியாக ஐ.்.போனில் மின் புத்தகங்களைப் படிக்கும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். தடவித் தடவி எ்ழுத்துக்களைப் பெரிதாக்கி "இதோ நானும் மின் புத்தகம் படிக்கிறேன்" என்று பறை சாற்றும் இந்த வகையை நாம் மின் புத்தகக் கருவியாக சேர்க்க முடியாது.

அதே போல, ஐ-பாட் (iPad) போன்ற கருவிகள் சிறிய கணினிகள். திரைத் தடவல் முறையில் இயங்கும் இது போன்ற கருவிகள் பல உள்ளன. இதில் மின் புத்தகங்கள் படிக்கலாம். ஆனால், இவை ஒரு நாளுக்கு மேல் தாங்காது - மின்னூட்டம் செய்ய வேண்டும். மேலும் நல்ல சூரிய வெளிச்சத்தில் படிக்க இயலாது. அதனால் இது போன்ற Tablet கணினிகளையும் நாம் மின் புத்தகக் கருவிகளாகச் சேர்க்க முடியாது. நாம் ஒப்பிடவிருக்கும் அத்தனை மின் புத்தகக் கருவிகளிலும் இரண்டு அம்சங்கள் உண்டு:

1) E-Ink என்ற தொழில்நுட்பம் மூலம் வேலை செய்யும் சூரிய வெளிச்சத்தில் படிக்க வல்ல கருவிகள்.

2) ஏராளமாக எழுத்துக்களை பெரிதுபடுத்தாமல் சாதாரண புத்தகப் படிப்பு அனுபவத்தை தர வேண்டும்.

கிண்டில் (Kindle), நுக் (Nook), சோனி (Sony), மற்றும் கோபோ (Kobo) இன்றைய முன்னணி மின் புத்தகக் கருவிகள். பெரிய திரையுடைய கிண்டில் DX $300 -க்கும் மேலாக விலை. ஆறு அங்குல கிண்டில் 3 மற்றும் நுக், கோபோ எல்லாம் $140 க்கு விற்கின்றன. சோனி 7 அங்குல திரையுடன் விற்கும் மின் புத்தகக் கருவி சற்று விலை அதிகம் ($250) ஆனால், பல நிறங்களில் வருகிறது - பெண்கள் இதை, மிகவும் விரும்புகிறார்கள்.

மின் புத்தகக் கருவி உலகில் இரு கோஷ்டிகள் உள்ளன. ஒன்று, அமேசானின் கிண்டில் கோஷ்டி. மற்றவர்கள் எல்லாம் இன்னொரு கோஷ்டி (எதிர்க்கட்சி?). நுகர்வோர் இந்த இரு கோஷ்டிக்கு பின்னால் உள்ள சூட்சுமங்களை அறிவது அவசியம்.






கிண்டில் MOBI என்ற வடிவூட்டத்தைப் (format) பயன்படுத்துகிறது. மற்றவர்கள் அடோபியின் நீரடி என்ற வடிவூட்டத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதனால் என்ன? வட அமெரிக்காவில் இது பெரிய விஷயம். இங்குள்ள நூலகங்கள் நீரடி வடிவூட்டத்தில் உறுப்பினர்களுக்கு மின் புத்தகங்களைக் கடனளிக்கிறது. உங்களிடம் கிண்டில் இருந்தால், நூலகத்திலிருந்து மின் புத்தகங்களை கடன் வாங்கிப் படிக்க முடியாது. அமேஸான் அதனுடைய MOBI வடிவமைப்பிலும் புத்தகங்களை வெளியிட நூலகங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

மேலும், இன்னொரு விஷயம் சில சமயங்களில் முக்கியமாகிறது. கிண்டிலில் மெமரியை விரிவாக்க முடியாது. மற்ற பல புத்தகக் கருவிகளில் இது சாத்தியம். MP3 யில் இசை கேட்க சில மின் புத்தகக் கருவிகள் வழி செய்து அசடு வழியத்தான் செய்கிறது! ஜி.பி.எஸ்-ஸில் எவ்வளவு பேர் MP3 மூலம் இசை கேட்கிறார்கள்? ஏதோ மலிவாகிவிட்டது என்று அள்ளி வீசும் இவர்களது போக்கு மின்னணு தொழிலுக்கே உரிய தனியான அம்சம்!

இதைத் தவிர மின் புத்தகங்களை உங்களது கணினிக்கும், கருவிக்கும் சரியாக பராமரிக்க நல்ல மென்பொருட்கள் வந்துள்ளன. Callibre என்பது இலவச மின் புத்தக நூலக பராமரிப்பு மென்பொருள். பலர் இதைப் போன்ற மென்பொருள் பற்றி அறியாமல் அநாவசியமாக அல்லாடுகிறார்கள். மற்றபடி வேறு சமூக மின் புத்தகக் கருவி தாக்கங்களை ஆராய்வோம்.

பொதுவாக வக்கீல்கள் தங்களின் படங்களை பல புத்தகங்கள் அடுக்கிய அலமாரி முன்பு எடுத்துக் கொள்வார்கள். மேற்கத்திய நாடுகளில் 8ஆவது வகுப்பு தேறிய உடனே இப்படி ஒரு புகைப்படத்தை எடுத்துக் கொண்டு பலரிடம் அலட்டிக் கொள்வது வழக்கம். சரி, பிரச்சினை என்ன? அட, அலுமாரி நிறைய அடுக்கி வைத்த புத்தகம் எல்லாம் ஒரு டைரி அளவில் அடங்கி விட்டது. மிகவும் சௌகரியமாக இருந்தாலும் அலட்டல் வாய்ப்பைக் குறைக்கும் இந்தத் தொழில் நுட்பம் ஒழிக!

விருந்தினர்கள் வீட்டிற்கு வரும் பொழுது, சமீபத்தில் படித்த புத்தகம் ஒன்றை மேற்கோள் காட்டி அப்படியே தன்னுடைய புத்தக அறைக்கு அழைத்துச் சென்று அந்தப் புத்தகத்தில் சரியாக எந்தப் பக்கத்தில் அப்படி சொல்லியிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதன் பெருமையே/சுகமே தனி. சிறியமின் புத்தகக் கருவியைஇயக்கி, அதில் மிக எளிதில் புத்தகங்களில் தேடி இதைக் காட்டும் பொழுது,ஏதோ எலக்ட்ரோனிக் தில்லாலங்கடி செய்வது போல பிசுபிசுத்து விடுகிறது!

போன வாரம் ஏன் வீட்டிற்கு வரவில்லை என்று கேட்டுத் துளைக்கும் நண்பருக்கு, "நான் லைப்ரரி சென்று அப்படியே படிப்பில் மூழ்கி விட்டேன்" என்று பொய் சொல்வது கடினமாகிவிட்டது. வீட்டில் உட்கார்ந்தபடியே லைப்ரரி மின் புத்தகங்களை அலசி, மின்கடன் வாங்கி, படித்து, குறித்த திகதியில் தானாகவே கருவியிலிருந்து மறையும் இந்த தொழில்நுட்பம் மிகவும் உபயோகமாக இருந்தாலும் பொய் சொல்ல உதவாததால் ஒழிக!

இந்த மின் புத்தகக் கருவி தயாரிப்பாளர்கள் கில்லாடிகள். புத்தக படிப்பு அலட்டல்களுக்காக புதியஅம்சங்களை கொண்டு வந்த வண்ணம் இருக்கிறார்கள். படிக்கும் புத்தகம் பற்றி கம்பியில்லா இணைப்பு மூலம் கருவியிலிருந்தே .்.பேஸ்புக்கில் அலட்டிக் கொள்ளலாம். அதே போல பலவித குறிப்புகளையும் கருவியிலிருந்தே .்.பேஸ்புக் மற்றும் டுவிட்டரில் உலகிற்கு பறை சாற்றலாம். வாழ்க இந்த தொழில்நுட்பம்!



காலை அலுவலக ரயில் பயணம் பல மேற்கத்திய பெரு நகரங்களில் ஒரு அன்றாட நிகழ்வு. நேற்று வெளியான ஸ்டீவன் கிங் புத்தகத்தை அலட்டலாக படிப்பது பலரது வழக்கம். இதையே மின் புத்தகக் கருவியில் பலரும் இன்று செய்கிறார்கள். ஆனால், பாவம் பல சகபயணிகளுக்கு இது தெரிவதே இல்லை. "இந்த ஆள் எப்பவும் இந்த நீலநிற கம்ப்யூட்டர் கருவியில் என்னதான் பார்த்துக் கிழிக்கிறாரோ" என்ற எண்ணமே உருவாக்க உதவுகிறது.

"நான் என் புத்தகங்களை ஒழுங்காக பராமரிப்பதில் குறிப்பாக இருப்பவன்" என்று நம்மில் பலரும் அலட்டிக் கொள்கிறோம்."கடன் வாங்கிச் செல்லும் நண்பர்களிடம் நான் ரொம்ப கறார்!" என்றும் நமது குணாதிசயத்தையே தெளிவுபடுத்தும் பலருக்கு இவ்வகை கருவிகள் பெரிய எதிரி. பராமரிப்பு, கடன் எல்லாம் சாதாரண சிலிக்கான் விஷயங்கள். இதுக்குப் போய் அலட்டிக்கலாமா?

இவ்வகை கருவிகளை வாங்கியவுடன் சில வாரங்களுக்கு எல்லோரும் தீவிரமாகப் படிக்கிறார்கள். காகித புத்தகங்கள் படித்து முடிக்காமல் மேஜையின் மேல் விட்டு வைத்தால், சில சமயங்களில், "படித்து முடித்துத் தொலையேன்" என்று அது சிலருக்கு நினைவு படுத்தலாம். ஆனால் மின் புத்தக்க் கருவி இப்படி எந்த தூண்டுதலுக்கும் உதவாமல் பாவமாய் சில ஆயிரம் புத்தகங்களை தாங்கி யாராவது படிப்பார்களா என்று சிலிக்கான் ஏக்கத்துடன் மந்தமாக தூங்குவது உண்மை.

இக்கருவிகளால் பல சமூக நன்மைகளையும் நுகர்வோர் சொல்லி வருகின்றனர்.மேற்குலகில் ஒரு மாத கோடை விடுமுறையில் சுற்றுலா சென்றால் டசின் கணக்கில் புத்தகம் படிப்பதற்கு எடுத்துச் செல்வது வழக்கம். வரவர, விமானக் கம்பெனிகள் எதை எடுத்துச் சென்றாலும் எடைக்கு எடை கட்டணம் வசூலிக்கிறார்கள். மின் புத்தகக் கருவிகள் விமான் கம்பெனிகள் எடை கட்டண சுருட்டலிருந்து பலரைக் காப்பாற்றுகின்றது.

அதே போல, ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாறும்போது பல நூறு பத்தகங்களை எடுத்துச் செல்வது பெரிய இட/எடைப் பிரச்சினை. மின் புத்தகக் கருவிகளை எடுத்துச் செல்வது ஒரு பொருட்டாகவே இருக்காது. நாம் மேலே பார்த்த சமூக அனுபவங்கள் ஒரு புதிய தொழில்நுட்பத்தை உபயோகிக்கும் சில முன்னோடிகளின் கருத்துக்கள்.ஒரு 20 வருடம்முன்பு மோட்டார் பைக் ஓட்டிக்கொண்டு ஒற்றைக் கையில் எஸ்.எம்.எஸ்ஸை நினைத்துப்பார்த்தோமா? அதற்காகசெல்பேசிகளை துறக்கப் போகிறோமா?

மின் புத்தகக் கருவிகளால் மனிதர்களுக்கு நன்மைகளே அதிகம் என்பது பலரின் கருத்து. மற்றவை எல்லாம் மனித சமூக வழக்கங்களின் பிரதிபலிப்புகள் தான்.

**விருந்தினர்கள் வீட்டிற்கு வரும் பொழுது, சமீபத்தில் படித்த புத்தகம் ஒன்றை மேற்கோள் காட்டி அப்படியே தன்னுடைய புத்தக அறைக்கு அழைத்துச் சென்று அந்தப் புத்தகத்தில் சரியாக எந்தப் பக்கத்தில் அப்படி சொல்லியிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவதன் பெருமையே/சுகமே தனி.**





# ஈரான் எண்ணெய்க் கொள்வனவு நிறுத்தவேண்டிய நிர்ப்பந்த நிலை



(கொழும்பு)

அமெரிக்கா ஈரான்மீது விதித்த பொருளாதாரத் தடையினால் ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெயின் அளவைக் குறைக்க வேண்டியுள்ளதாக பெற்றோலியத் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஈரானிலிருந்து இலங்கைக்கு வருடாந்தம் 13 கப்பல் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு, இலங்கையில் சுத்திகரிக்கப்படுகிறது.

எனினும் மேற்படி தடை காரணமாக எண்ணெய்க் கொள்வனவும் ஈரானுடன் டொலரில் வர்த்தகம் செய்வதும் கடினமாகியுள்ளது.

இலங்கை தனது வருடாந்த மொத்த எண்ணெய்க் கொள்வனவை தலா 135,000 தொன் கொண்ட 3 கப்பல் தொகுதிகளால் குறைக்க முடிந்தால் எஞ்சிய எண்ணெய்த் தொகையை டொலருக்குப் பதிலாக வேறு நாணயமொன்றை பயன்படுத்தி ஈரானிலிருந்து இறக்குமதி செய்ய முடியும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இதற்காக இந்திய ரூபாவை பயன்படுத்துதல் உட்பட பல வேறு தெரிவுகள் உள்ளதாக அமைச்சர் கூறினார்.

இதேவேளை, தடைகாரணமாக, ஈரானிலிருந்து இலங்கை இறக்குமதி செய்யும் எண்ணெயின் அளவுகுறைவடையும் எனினும், அதன் தாக்கத்தை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என ஈரானியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இத்தாக்கம் தற்காலிகமானதாக இருக்கும் என இலங்கைக்கான ஈரானிய தூதுவர் மொஹமட் நபி ஹசனிபோர் கூறினார். எமது நண்பனான இலங்கைக்கு நாம் ஆதரவளிக்கவும் அதன் இனிய மக்கள் பாதிப்புக்கு உள்ளாகாதிருப்பதற்கும் முயற்சிக்கிறோம்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நம் மால் ஆன அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என அவர் கூறினார். இத்தடையின் காரணமாக ஆசியாவைவிட மேற்குலகத்திற்கே அதிக பாதிப்பு ஏற்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சிக்கினார் பிரிட்டன் பிரஜை

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபாலகத்திற்கு தபால் மூலம் போதைப் பொருள் வந்தபோது அதனை பெறச் சென்றவேளை, அதிகாரிகள் பிடியிலிருந்து தப்பியோடிய வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

தாய்லாந்தின் - பெங்கொக் நோக்கிச் செல்லவிருந்த குறித்த பிரித்தானிய பிரஜை குறித்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார்.

இலங்கையின் பிரபலமான நடிகையின் பெயர் முகவரிக்கு வெளிநாட்டில் இருந்து கொழும்பு மத்திய தபாலகத்திற்கு ஹசீஸ் எனப்படும் போதைப் பொருள் .சஞ்சிகையில் மறைத்து வைக்கப்பட்டு வந்தது.

இதனைப் பெறுவதற்கு பிரித்தானிய நாட்டுப் பிரஜைகள் சென்றிருந்தபோது ஒருவர் கையும் களவுமாக பிடிபடவே மற்றையவர் தப்பிச் சென்றிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார்.

# தம்புள்ளை பள்ளிவாசல் தாக்குதல்; அரசிற்குத் தொடர்பு இல்லை

## கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தம்புள்ளை மஸ்ஜிதுல் ஹைரியா பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவத்திற்கும் அரசாங்கத்திற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரோ தெரிவித்தார்.

இச்சம்பவமானது சிறு இனவாதக் குழுக்களுக்களின் செயற்பாடேயாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தம்புள்ளை பள்ளிவாசல் விவகாரம் தொடர்பாக விளக்கமளிக்கும கூட்டம் நேற்று முன்தினம் கல்முனைக்குடி ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது. இதன்போதே கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

குறித்த பள்ளிவாசலுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடைபெற்றதே தவிர, பள்ளிவாசல் உடைக்கப்படவில்லை. பள்ளிவாசல் உடைக்கப்பட்டதாக வெளியான செய்திகள் ஊடகங்களால் திரிபுபடுத்தப்பட்டதேயாகும். அவ்வாறு சம்பவம் இடம்பெற்றதாக நீங்கள் கருதினால் உங்கள் அனைவரையும் தம்புள்ளைக்கு கூட்டிச் சென்று குறித்த பள்ளிவாசலை காட்டுவதற்கு நான் தயாராக வுள்ளேன் என்றார்.

கல்முனைகுடி ஜும்ஆ பள்ளிவாசல் தலைவரும் அம்பாறை மாவட்ட அனைத்து பள்ளிவாசல் சம்மேளன தலைவருமான டாக்டர் எஸ்.எம்.ஏ.அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண இராணுவ கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரோ, அம்பாறை மாவட்ட கட்டளையிடும் தளபதி மேஜர் ஜெனரல் ஹரிந்த பெரேரா, அம்பாறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரேமலால் ரணகல, அம்பாறை மாவட்ட உலமா சபை தலைவர் எஸ்.எச்.ஆதம் பாவா மௌலவி மற்றும் அகில இலங்கை நல்லுறவு ஒன்றிய தலைவர் டாக்டர் எம்.ஐ.எம்.ஜெமீல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# இனங்காணாத சிலையை கொண்டு சென்றவர் கைது



இனம் காணப்படாத உலோகத்தினால் வடிக்கப்பட்ட சிலையொன்று மீட்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்றில் பயணம் செய்த ஒருவரிடமிருந்து சில சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் இனந்தெரியாத உலோகம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட உருவச் சிலை யொன்றும் இருந்துள்ளது. இந்த உருவம் ஒன்றரை அடி உயரமும், 18 கிலோ எடையும் உடைய தென பொலிஸார் தெரிவித்துள்ளனர். பேருந்தில் இராணுவத்தினர் நடத்திய சோதனையின் போது இந்தச் சிலைகள் மீட்கப்பட்டதுடன், குறித்த நபர் ஓமந்தை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# அதிகரித்துச் செல்லும் இணைய குற்றங்கள்

(கொழும்பு)

இணைய குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளதை தாம் அறிந்துள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இணைய குற்றச்செயல்கள் தொடர்பாக தமக்கு 202 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் அவற்றில் பல முறைப்பாடுகள், பேஸ்புக் தளத்தில் முறைகேடாக ஊடுருவல் இடம்பெற்றமை தொடர்பானது எனவும் அவர் தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் இணைய குற்றச்செயல் ஆய்வு கூடம் இதுவரை 25 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் தீர்வுகண்டுள்ளது. பேஸ்புக் மின்னஞ்சல் என்பவற்றில் ஊடுருவல் செய்தல், அல்லது கம்பனிகளின் அல்லது தனிநபர்களின் பிரதிநிதியாக நடித்து இணையம் மூலம் மோசடி செய்தல் என்பவை தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

இவ்வாறான குற்றச்செயல்கள் தேசிய பாதுகாப்பு, பொருளாதாரம், பொதுச்சட்டம் என்பவற்றுக்கு எதிரான குற்றங்களாகவும், நம்பிக்கை மோசடி குற்றங்களாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கணினிகளைச் செயலிழக்க வைத்தல், இரகசிய தகவல்களை பெற்றுக்கொள்ளல், அவற்றை பயன்படுத்துதல், கணினியில் உள்ள தகவல்களை சேகரித்தல், குழப்புதல், அழித்தல் என்பனவற்றில் ஈடுபடுவோர் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றச்செயல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவர்.

இளம் பெண்களின் படங்களை பல மின்னஞ்சல்களுக்கும் செல்லிடத் தொலைபேசிகளுக்கும் அனுப்பப் போவதாக மிரட்டி காரியம் சாதிக்கும் நபர்கள் பற்றிய விபரங்கள் இரகசிய பொலிஸாருக்கு கிடைத்துள்ளன.

# தென்கொரியப் பயணம் இலங்கைக்கு நன்மை

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தென்கொரிய விஜயம், இலங்கைக்கு பல்வேறு நன்மைகளை பெற்றுத்தருவதாக அமைந்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

தென்கொரிய விஜயம் தொடர்பில் தெளிவூட்டும் சந்தர்ப்பத்திலேயே வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கொரியாவின் பாரிய நிறுவனங்களிலும் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து எடுத்துக்கூறப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் அவர்கள் திருப்தி வெளியிட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்தநாட்டு தொழிலதிபர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு எண்ணியுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், 23 ஆயிரம் இலங்கையர்கள் கொரியாவில் பணிபுரிவதாகவும் குறிப்பிட்டார்.



(கொழும்பு)

தென்கொரியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சோல் நகரில் அமைக்கப்பட்டுள்ள நவீன தொழிற்சாலையொன்றை பார்வையிட்டார்.

இந்த நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் நிசாந்த முதுஹெட்டிகம, தென் கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர் திஸ்ஸ விஜேரத்ன, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் ஆகியோர் உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்

# விமானப்படைத் தளபதியின் ஹோட்டல்; பறிமுதல் செய்யும் அரசாங்கம்



(கொழும்பு)

முன்னாள் விமானப்படைத் தளபதி ரொசான் குணதிலக்கவின் ஹோட்டலை அரசு பறிமுதல் செய்யும் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

உலக உரிமைகளில் ஒன்றாக பட்டியல் படுத்தப்பட்டுள்ள நக்கிள்ஸ் வனப் பகுதியில் குறித்த ஹோட்டல் அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்த ஹோட்டலை அரசுடமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குறித்த ஹோட்டல் அமைந்துள்ள காணிப் பகுதியின் ஆரம்ப உரிமையாளரான ரோய் டி சில்வா, மோசடியான முறையில்,காணிகளை, விமானப்படைத் தளபதிக்கு விற்பனை செய்துள்ளார்.

ஹோட்டல் அமைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த காணியின் ஆரம்ப உரிமையாளருக்கு அழைப்பு விடுத்த போதிலும் அந்த அழைப்பினை குறித்த நபர் ஏற்றுக்கொள்ளவில்லை என அமைச்சர் யாப்பா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் தீர்மானங்களை எதிர்க்க முடியாது என முன்னாள் விமானப்படைத் தளபதி ரொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஏதேனும் ஓர் தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்தினால் அதனை எதிர்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளதோடு, அது தொடர்பில் கருத்து வெளியிடவும் முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேவையற்ற அச்சம்



- அரவிந்தன் கட்டுரையிலிருந்து.

**மீ**ண்டும் ஒரு கிளர்ச்சி அல்லது ஆயதப்போராட்டம் எழலாம் என்ற எதிர்பார்க்கையோ அல்லது அச்சமோ அரசாங்கத்திடம் உள்ளது என்றே தோன்றுகிறது.

உள்நாட்டில் இதற்கான சூழலோ மன நிலையோ இல்லை என்றாலும் வெளிச் சக்திகளின் தூண்டுதலில் ஏதாவது அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சம் அரசாங்கத்துக்கு உள்ளது போலுள்ளது.

உள்நாட்டிற் காணப்படும் அதிருப்தியான அம்சங்களைப் பிரதானப்படுத்தி, இத்தகைய குழப்பங்களை அல்லது கிளர்ச்சிகளை உருவாக்குவதற்கு வெளிச்சக்திகள் முயற்சிக்கலாம் என்பது அரசாங்கத்தின் சந்தேகமாக இருக்கலாம்.

அதாவது, பயங்கரவாதம் மீண்டும் தோற்றம் கொள்ளலாம் என்ற அச்சம்.

ஆனால், இது அநாவசியமான பதற்றமும் சிந்தனையும் தேவையற்ற அச்சமுமாகும்.

ஏனெனில், போரினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து மக்களும் நாடும் இன்னும் மீளவில்லை. ஆயுதப்போராட்டங்களின் வீழ்ச்சியும் அவை ஏற்படுத்திய கசப்பான அனுபவங்களும் மக்களை விட்டு இன்னும் நீங்கவில்லை.

மக்கள் நிம்மதியான - அமைதியான - சுபீட்சமான ஒரு வாழ்வையும் எதிர்காலத்தையுமே விரும்புகிறார்கள்.

போரின் முடிவை சமாதானத்துக்கான தொடக்கமாக, அமைதிக்கான ஆரம்பமாக, நல்லிணக்கத்துக்கும் புரிந்துணர்வுக்கும் உரிய சந்தர்ப்பமாக, புதிய சகாப்தத்துக்கான ஒரு சூழலாகவே எண்ணினார்கள். போரின் பாதிப்புகள் மிகக் கடினமானவையாக இருந்தாலும் அதன் வடுக்கள் சக்திக்கு மீறியவையாக இருந்தாலும் புதிய தொடக்கம் சீராக இருக்குமானால் அது எல்லாக் காயங்களையும் மாற்றிவிடும் என்றே நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால், மக்களின் எதிர்பார்ப்பும், விருப்பமும் நம்பிக்கையும் கனவும் இன்று கேள்விக்குறியின் மீதே நிறுத்தப்பட்டுள்ளன. சாதாரண பிரச்சினைகளுக்குக் கூடத் தீர்வைக் காண முடியாத ஒரு நிலை உருவாகி வருவதாக அவர்கள் எண்ணுகின்றனர்.

முக்கியமாக பொருளாதார நெருக்கடிகளும் இனப்பிரச்சினையும் தீர்க்க முடியாத கணிதங்களாக உருப்பெருத்துக் கொண்டே செல்வதைக் கண்டு மக்கள் மீண்டும் கலக்கமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் மக்களின் நம்பிக்கைகளை வெற்றியடைய வைத்துத் தானும் வெற்றியைப் பெறுவதற்குப் பதிலாக அரசு எதிர்க்கணிதத்தில் சிந்திக்கக் கூடாது.

எதற்கும் முதலில் யதார்த்தம், உண்மை என்பவற்றை ஒருவர் உணர்ந்து கொள்ள வேண்டும். இது அரசுக்கும் பொருந்தும். சாதாரணக் குடிமகனுக்கும் பொருந்தும். அரசியற் கட்சிக்கும் அரசியற் தலைவர்களுக்கும் நாட்டின் தலைமைப் பீடத்தினருக்கும் பொருந்தும்.

இலங்கையின் யதார்த்த நிலைமை என்பது மிகச் சவாலுக்குரியது. இன முரண்பாடுகளுக்குத் தீர்வு காண வேண்டிய யதார்த்தம். பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவேண்டிய யதார்த்தம். ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் மீள் நிலைப்படுத்த வேண்டிய யதார்த்தம். சர்வதேச உறவுகளைச் சீர்ப்படுத்த வேண்டிய அவசியம் எனப் பல யதார்த்தமான விசயங்களில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளது.

நாட்டின் நன்மைகளைக் குறித்துச் சிந்திப்போர், மதபீடாதிபதிகள், சமாதான விரும்பிகள் போன்றோர் நிச்சயமாக இவற்றையிட்டுக் கவனத்தைச் செலுத்த வேண்டும். அத்துடன் இவர்கள் அரசாங்கத்துக்கும் இவற்றைக் குறித்து எடுத்துரைப்பது அவசியமானது.

உண்மை நிலைமையைக் குறித்தும் யதார்த்த நிலைமையைக் குறித்தும் அரசாங்கத்தையும் தலைவர்களையும் அழைத்து வருவது இன்றைய நிலையில் அவசியமான பணியாகும்.

போரின் வெற்றி என்பது மிகையான உணர்ச்சிகளையும் மிகையான விளங்குதல்களையும் ஏற்படுத்தியிருக்கலாம். அவற்றைக் கடந்து, நாட்டினதும் மக்களினதும் யதார்த்த நிலைமை என்ன? தேவைகள் என்ன? அவற்றை எட்டுவதற்கான வழிகள் என்ன? என்று பார்க்க வேண்டிய பக்குவத்தை வளர்த்துக் கொள்வதே பாதுகாப்பானதாகும்.

இலங்கையின் துயரம் நீடிக்க வேண்டுமா அல்லது அது முடிவுக்கு வரவேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டிய பொறுப்பு இன்று எல்லோருடைய மூளைக்கும் உரியது.

இலங்கையின் துயரம் என்பதே இன்று இந்தப் பிராந்தியத்தில் சர்வதேசத் தரப்பின் அரசியல் பொருளாதார முதலீடாக மாறியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டால் நமது மூளையின் கதவுகள் தானாகவே திறபடும்.

இதையெல்லாம் உணர்ந்து கொள்வதும் உணர்த்துவதும் எப்படி என்பதே இன்றும் என்றுமுள்ள சவால்.

இந்தச் சவாலை வெற்றி கொள்ளாதவரையில் துயரமும் பதற்றமும் அரசுக்கு மட்டுமல்ல மக்களுக்குந்தான். ஏனைய தலைவர்களுக்குந்தான்.

ஆகவே, இதைக் குறித்துச் சிந்திப்பதே பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும் வழியாகும்.

ஆனால், அதற்கு முதலில் மனதில் மாண்புடைய தன்மைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அரசியல் நலன் என்பது துணிச்சலும் சரியான வழிமுறையும் உள்ள செயற்பாட்டிலேயே கிட்டுகிறது என்ற அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டால் நிம்மதியும் வெற்றியும் நலனும் தாராளமாகக் கிட்டும்.

இலங்கை வெற்றிக்கும் தோல்விக்கும் இடையில் கிடந்து இன்னும் தளம்பத் தேவையில்லை.

## மூங்கில் இல்லா நாடு!



**பி**ளை-வுட் தொழிற்சாலை ஒன்றை, சுவீடன் நாட்டு கூட்டுறவுடன் நிறுவ நான் ஏற்பாடு செய்து கொண்டிருந்த போது, "இந்தத் தொழிற்சாலைக்காக, நீங்கள் சுவீடன் நாட்டிலிருந்து மூங்கில்கள் இறக்குமதி செய்வதில்லை என்று உறுதிமொழி தர வேண்டும்..." என்று, என்னிடம் சொன்னார் அரசாங்க அதிகாரி ஒருவர். அந்த இடத்திலேயே, அவர் கேட்ட உறுதிமொழியை எழுதிக் கொடுத்தேன். ஏனெனில், சுவீடன் நாட்டில் மருந்துக்குக் கூட மூங்கில் கிடையாது.

- இந்திய தொழிலதிபர் ஜி.டி.பிர்லா

## மிகப் பழைய குட்டி யானை!



**ஏ**றக்குறைய 42 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இறந்த பழங்கால குட்டி யானை பனிப் பாறைகளுக்கிடையிலிருந்து கடந்த 2007ஆம் ஆண்டில் ரஷ் யாவின் சைபீரியாவில் கண்டெடுக்கப்பட்டது. இதுதான் உலகிலேயே அதிக ஆண்டுகள் பதப்படுத்தப்பட்ட குட்டி யானை என்ற புகழைப் பெற்றிருக்கிறது. லூபா என்று பெயரிடப்பட்டிருக்கும் பெண் யானையான இதை ஆசியா முழுவதும் தற்போது கண்காட்சிக்கு வைக்க இருக் கிறார்கள். ஏப்ரல் 12 முதல் மே 10 வரை ஹொங்காங்கில் காட்சிக்கு வைக்கப்படுகிறது லூபா.

உடல் உறுப்புகளை ஆராய்ந்ததில், குட்டி யானை லூபா அதன் தாயிடத்தில் குடித்த பாலின் துளி வயிற்றில் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். மேலும் அதன் முடி, விரல் நகங்கள் ஆகியவற்றை தனியாகப் பிரித்து ஆய்வுக்கு வைத்திருக்கிறார்கள். அதன் உள்ளுறுப்புகள் இன்று வரை கெடாமல் இருக்கின்றன. இதன் மூலம் மிகப் பழங்கால யானைகளுக்கும் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த யானைகளுக்கும் இருக்கும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய முடியும் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

## நீண்ட ஆயுளுடன் புதிய மின்குமிழ்!



**இ**ருபது வருடங்கள் அல்லது 30,000 மணித்தியாலங்கள் பயன்படுத்தக் கூடிய, மின்சாரத்தை சிக்கனமாக மீதப்படுத்தும் எல்.ஈ.டீ. மின்குமிழ் ஒன்றை உலகிற்கு அறிமுகம் செய்வதற்கு அமெரிக்க கம்பனி ஒன்று தயாராகி வருகிறது. அமெரிக்காவின் மின்சாரத் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட போட்டியிலும் 10 வோட் அளவினைக் கொண்ட எல்.ஈ.டீ. மின்குமிழுக்கே முதலிடம் கிடைத்துள்ளது. மூன்று வருட உத்தரவாதத்தினைக் கொண்ட இந்த மின் குமிழை சந்தைப்படுத்த தயாராகி வரும் அதன் உற்பத்தி நிறுவனம் ஒரு மின்குமிழின் விலை 60 அமெரிக்க டெ-ாலராக நிர்ணயித்துள்ளது. (7,800 ரூபா)

சீஎல்எவ் மின்குமிழை விடவும் ஒருபடி முன்னேற்றமான முறையில் மேற்படி மின்குமிழ் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இந்த மின்குமிழ் சந்தைக்கு வந்த உடனேயே இதனை மக்கள் அதிகவிலை கொடுத்து கொள்வனவு செய்வதற்கு அதிகம் முன்வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாத போதிலும், காலப் போக்கில் மக்கள் இதனைக் கொள்வனவு செய்ய முன்வரு வார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அமெரிக்காவின் "டைம்ஸ்" சஞ்சிகை தெரிவிக்கின்றது.



## பாடம்!

"பேசும் கேள் என் கிளி" என்றான்
கூண்டைக் காட்டி.
வால் இல்லை,
வீசிப் பறக்கச் சிறகில்லை
வானம் கைப்பட வழியில்லை...
"பார் பார் இப்போது பேசும்" என
மீண்டும் மீண்டும் அவன் சொல்ல,
"பறவை என்றால் பறப்பது எனும்
பாடம் முதலில் படி" என்றேன்.

- கல்யாண்ஜி

# சினிமா சினிமா



கவிஞர் பா.விஜயின் "இளைஞன்" படத்தில் வில்லி வேடத்தில் நடித்து, தன் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நமீதா, அந்தப் படத்தின் படுதோல்வியோடு கன்னடத்துக்குச் சென்று விட்டார். திரும்பவும் மூன்றாவது இன்னிங்சில் நாயகி ஆக வருகிறார் நமீதா. "ஒரு நடிகையின் வாக்குமூலம்" இயக்கிய ராஜ்கிருஷ்ணாவின் "அச்ச மென்ன" படத்தில், அதிர டிப்பெண் வேடமாம். பெண்கள், பிரச்சினை களைக் கண்டு பயந்து விடக் கூடாது. எதிர்நீச்சல் போட்டு, எதிர்ப்பு களை முறியடிக்க வேண்டும் என்பதைச் சொல்லப் போகிறார். நமீதா சொன்னால் "மச்சான்கள்" கேட்டுக் கொள்கிறார்களா பார்க்கலாம்.



மற்றுமொரு அதிரடிப் பெண்ணும் வருகிறார். செல்வராகவன் இயக்கும், "இரண்டாம் உலகம்" படத்தில், அனுஷ்காவுக்கு இரண்டு வேடம். அதில் ஒன்று, மலைவாழ் பெண் வேடம். இதுதான் அந்த அதிரடி. சீனப் பயிற்சியாளர் ஒருவரை வரவழைத்து, அனுஷ்காவுக்கு கராட்டி, குங்பூ ஆகிய பயிற்சிகளை கொடுத்துள்ளார் செல்வராகவன். அருந்ததிக் குப் பின், நான் நடிக்கும் அதிரடிப்படமாக இப்படம் எனக்கு அமையும்... என்கி றார் அனுஷ்கா. மீண்டும் அ(ரு)ந்த தீ விழிகளைப் பார்க்கப் போகிறோம்!

ஸ்ருதிஹாசனிடம் பேட்டி கேட்டால் "என்னைப் பற்றிய எல்லா விஷயங்களும் "நெட்"டிலேயே தெளிவாக இருக்கு, அதை எடுத்துப் போட்டுக்கொள்ளுங்களேன்" என்கிறாராம். அதே போல், தன்னிடம் ஆங்கிலம் பேசுபவர்களிடம்



"நான் தமிழ்ப் பொண்ணு, தமிழிலேயே பேசலாமே" என்கிறாராம். ஏழாம் அறிவில் பேசிய "தமிலை"த்தான் கேட்டோமே!



அஜித்தின் "பில்லா 2" படத்தின் பெரும்பகுதி முன்னாள் சோவியத் யூனியனுடன் இருந்த ஜோர்ஜியா நாட்டின் பனிப் பிரதேசத்தில் படமாக்கப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே முதல் முறை யாக எபிக் கமெராவில் படமாக்கப்பட்ட படம் என்ற பெருமையையும் "பில்லா 2" பெற்றிருக்கிறது. வெண்பனிச் சாலையில் "தல" பைக்குடன் கூடவே பறக்குமா கமெரா?

கமல்ஹாசனுடன் "விஸ்வரூபம்" படத்தில் நடித்து வரும் ஆண்ட்ரியா, இதுவரை இல்லாத அளவுக்கு கிளாமராக நடித்துள்ளாராம். இது குறித்து கேட்டால்... "என்னிடம் அழகும், இளமையும் நிரம்பிக் கிடக்கிறது. அதை ஏன் நான் மறைக்க வேண்டும்? தவிர, கிளாமராக நடிக்க மாட்டேன் என்று நான் ஒருபோதும் சொன்ன தில்லையே" என்கிறார். அடப் பார்-றா!



# எழுதும் கலை –12

உரைநடையை எளிதாக எழுதுவதற்கு ஒரு கழகம் ஆரம்பித்தால் அதற்கு நான் உடனே ஆயுள் சந்தா அனுப்புவேன். தற்போது தமிழில் கொஞ்சம் தீவிரமா-கச் சிந்திப்பவர்கள் மிகச் சிக்கலாக எழுதுகிறார்கள். அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று தெரிந்து கொள்வதற்கு திரும்பத் திரும்பப் படித்துப் படம் வரைந்து பாகங்களைக் குறிக்க வேண்டியிருக்கிறது.

என்னை சராசரிக்குச் சற்று மேற்பட்ட வாசகனாகக் கொள்ளலாம். எனக்குப் புரியவில்லை என்றால், புரிவது கஷ்டமாக இருக்கிறது என்றால் அது யார் தவறு?

உதாரணம் சொல்கிறேன்:

"இலக்கியத்தில் நேற்று இல்லாதிருந்து இன்று இக்கணம் புதிதாக நிகழ்ந்து சாத்தியமாகி உள்ள ஒரு பரிமாண விஸ்தாரம் புகைப்படக் கலை அல்லது தியேட்டரைச் சார்ந்துள்ள எல்லைகளிலிருந்து பிய்த்து எடுக்கப்பட்டதனாலும் விஸ்தாரம் சாத்தியமாகிவிட்ட இக்கணத்திலிருந்து அது இலக்கியத்தைச் சார்ந்த எல்லையாகி விடுகிறது." இந்த வாக்கியம் ஒரு தீவிரமான பத்திரிகையில் சமீபத்தில் வெளியானது. அதை எழு-தியவர் தீவிரமான ஒன்றைச் சொல்ல முயன்றிருக்கிறார். ஆனால் விஷயம் பஞ்சு படிந்து வாக்கியச் சிக்கலில் தன்னைத் தானே சுருட்டிக்கொண்டு இருக்கிறது. நத்தை போல் தொட்டால் உள்ளே போய்விடுகிறது.



"கம்யூனிகேஷன்" என்று ஒன்று இருப்பதைத் தற்போது பலர் மறந்துவிடுகிறார்கள். இது இங்லீஷ் இலக்கியத்திலிருந்து நேராக இறக்குமதியாகிவிட்ட பாபம். "ஸாம்வெல் பெக்கெட்" கமா, புல்ஸ்டொப் போடாமல், ஒரு நாவல் முழுக்க பந்தி பிரிக்காமல் எழுதி இருக்கிறார். ஆனால், இது புரியவில்லை, படித்தால் முதுகு வலிக்கிறது என்றால் அடிக்க வருகிறார்கள். ஏனெனில் பெக்கெட் நோபல் பரிசு வாங்கி இருக்கிறார். இதுபோல் ஃபாக்னரும் மிகக் கஷ்டமான எழுத்தாளர்.

நாவல் அல்லது சிறுகதைகளில் ஓரளவுக்கு இந்த involuted writing ஐ அனுமதிக்கலாம். நாவல், சிறுகதை கள் எழுதுபவனின் தனித்தன்மையை, மனத்தை, மன விகாரங்களைப் பிரதிபலிப்பவை. ஆனால் கட்டுரைகளில் சொல்லவந்த விஷயம் படிப்பவரை அடைய வேண்டிய கடமை இருக்கிறது. நான் என் பாட்டுக்கு எழுதிக்கொண்டே போவேன். நீ புரிந்துகொண்டால் புரிந்துகொள். இல்லாவிட்டால் சொறிந்துகொண்டு போ என்கிற மனப்பான்மை நல்லதல்ல.

இந்த தீவிர எழுத்தாளர்களைவிட நேர்முகமாகத் தாக்கும் "சவுக்கடி" போன்ற பத்திரிகைகளின் வசன நடை மேல் என்று தோன்றுகிறது.

- சுஜாதா



## பெருக்கலும் கூட்டலும்!

நம் பள்ளிக்கூடங்களிலுள்ள, வருகைப் பதிவேட்டில் (டாப்பில்) மாணவர் பெயருக்கு நேரே, 'சரி' அடையாளம் போட்டிருந்தால் அவர் பாடசாலைக்கு வந்துள்ளார் என்றும், பெருக்கல் (பிழை) அடையாளம் போட்டிருந்தால் வரவில்லை என்றும் அர்த்தம். இது ஆங்கிலேயர்களின் முறையாகும். பிரான்ஸில் உள்ள பாடசாலை டாப்புகளில், மாணவர் பெயருக்கு நேரே, கூட்டல் அடையாளம் போட்டிருந்தால், அந்த மாணவர் பாடசாலைக்கு வரவில்லை என்று பொருள்.

# களநிலை அறியாத திராவிடக் கட்சிகள்!

தற்போது, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிகளைப் போன்ற ஏகப்பிரதிநிதித்துவத்தை எதிர்பார்ப்பதுவும், பேச்சுவார்த்தை மூலமான தீர்வுக்கு முட்டுக்கட்டையாக அமைந்துள்ளது என்பதே உண்மை.

இலங்கை அரசுக்கும் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மூலம் இனப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டாலும், அதனை அரசின் முடிவாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தால் மட்டுமே அதனை விவாதத்திற்கு கூட பிற கட்சிகள் ஏற்றுக் கொள்ளும்.

அதேசமயம், அரசின் முயற்சியாக முன்வைக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் முன்னதாகவே கூட்டமைப்பின் ஒப்புதல் பெறப்பட்டுவிட்டது என்றால், அதுவே அந்த முயற்சி தோல்வியில் முடிவதற்கான அத்தாட்சி. கடந்தகாலம் கூறும் உண்மையும் இதுதான்.

அனுபவபூர்வமாக இதனை உணர்ந்துகொண்ட தனது கட்சி இருப்பதாகவும் கூறியது, தமிழ் நாட்டிலும் புலம் பெயர்ந்தோர் மத்தியிலும் மீண்டும் துளிர்விடும் "தனிநாடு" கோரிக்கைக்கு பதில் கூறுவதுபோலவும் அமைந்தது.

ஜெனிவா வாக்கெடுப்பு காலகட்டத்தில், அமெரிக்காவை அண்டி, அரசியல் செய்த புலம்பெயர்ந்த தமிழ் குழுக்களுக்கும், அவ்வாறே செய்ய நினைத்த கூட்டமைப்பு தலைமைக்கும் தற்போது சில உண்மைகள் புலப்படத் தொடங்கியிருக்கும்.

எதிர்மறை அரசியல் செய்துவரும் தமிழ் நாட்டில் உள்ள திராவிடக் கட்சிகள், இனப் பிரச்சினை குறித்த தேர்தல் அரசியல் தங்களுக்குள் இருந்தாலும், மத்திய அரசின் கொள்கைப் போக்கினை தேசியக் கட்சிகள்

- என்.சத்தியமூர்த்தி கட்டுரையிலிருந்து



காரணத்தினால்தான் இந்தியா, இலங்கை அரசின் நாடாளுமன்றக் குழு மூலமாக தீர்வுபெறப்படவேண்டும் என்ற முடிவை வரவேற்றுள்ளது. இந்தியாவில் இருந்துவந்த நாடாளுமன்றக் குழுவும் இந்த முடிவையே வலியுறுத்தியது.

இந்தியக் குழுவை சந்தித்த கூட்டமைப்பு தலைமை, தாங்கள் ஒன்றுபட்ட இலங்கையினுள் தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வைப் பெறுவதில் உறுதியாக இருப்பதாக கூறியுள்ளனர்.

அதேசமயம், தமிழ்நாட்டில் முன்னாள் தி.மு.க. முதலமைச்சர் இலங்கையில் "தனித் தமிழ் நாடு" அமைக்க ஐ.நா. சபை மூலம் வாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். இது, அமெரிக்காவில் வாழும் புலம்பெயர்ந்த தமிழர்களின் எண்ணத்தை எதிரொலிப்பதாக மட்டுமே அமைந்தது.

கூட்டமைப்பு அளவிற்கு களநிலை அறியாத புலம் பெயர்ந்த தமிழர்களைப் போன்றே தமிழ் நாட்டின் திராவிட அரசியல் தலைமையும் செயற்படுவதையே இது வெளிப்படுத்தியது.

அதேசமயம், இந்திய எதிர்க்கட்சித் தலைவர் தலைமையிலான இந்தியக் குழு, ஒன்றுபட்ட இலங்கையில் தமிழர்களுக்கு சமஉரிமை என்ற இந்திய அரசின் கொள்கையையும், அதனை அடைவதற்கு நாடாளுமன்ற கூட்டுக் குழுவே சரியான வழி என்ற எதார்த்தத்தையும் வலியுறுத்தியது.

இந்தப் பின்னணியில், இந்திய குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்திய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், இலங்கைப் பிரஜை என்றும், தான் பெருமையுறுவதாகவும், ஒன்றுபட்ட இலங்கையில் சமஉரிமை என்ற கோட்பாட்டுடனே முன்னெடுத்து முடிவெடுக்கும் நிலைமை தற்போது ஏற்பட தாங்களே காரணம் ஆகிவிட்டோம் என்று புரிந்துகொண்டுள்ளார்களா என்பது தெளிவாவதற்கு சிலகாலம் ஆகும். எது எப்படியோ, அதனாலான நஷ்டம் திராவிட கட்சிகளுக்குதான்.

இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கும் சரி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கும் சரி, ஜெனிவா வாக்கெடுப்பிற்கு பிந்திய காலத்தில் அர-சாடு பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெறமுடியுமா என்ற சந்தேகம் இருந்தது. பேச்சுவார்த்தைகளின் முடிவு எப்படி இருக்கவேண்டும் என்று இலங்கை மக்களும் அரசியல் கட்சிகளும் மட்டுமே பேசி ஒருமித்த கருத்துக்கு வரமுடியும்.

ஆனால், அதற்கான சூழல் உருவாவதற்கு, இந்திய எம்.பி.க்கள் குழுவின் தற்போதைய இலங்கை விஜயம் வழிவகை செய்துள்ளது. மற்றபடி, அவர்களது விஜயம் மட்டுமே இனப் பிரச்சினைக்கு ஓரேயடியாக தீர்வு ஒன்றை கொடுத்துவிடாது என்பது அனைவரும் உணர்ந்த ஒன்றே!

# பிரதேசங்களின் அபிவிருத்திக்கு புலம்பெயர்ந்தோர் உதவ வேண்டும்

## காரைநகர் அபிவிருத்தி சபைத் தலைவர் வேண்டுகோள்

(யாழ். நிருபர்)

எமது பிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு அரசாங்கத்தின் நிதியை மட்டு நம்பியிராமல் புலம் பெயர் நாடுகளில் வாழும் மக்களுக்கு உள்ளூர் தனவந்தர்களும் உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் அமரர் வினாசித்தம்பி செல்லம்மா ஞாபகார்த்த அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடத் திறப்பு விழாவிற்கு தலைமைவகித்து உரை நிகழ்த்திய காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் மகாராணி க.சோமசேகரம் குறிப்பிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மகாராணி சோமசேகரம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்க நிதியை விட தனிப்பட்ட பொது மக்களின் நிதி உதவிமூலமேஇந்த வைத்தியசாலை பல்வேறு வளங்களையும் பெற்று பிரதேச வைத்தியசாலையாக உயர்ந்து நிற்கிறது.

காரைநகர் அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களில் தனிநபர்களே அநேகமான வேலைத் திட்டங்களைச் செய்திருக்கிறார்கள். இந்த வைத்தியசாலையைப் பொறுத்தவரையிலும் அவ்வாறான நிலையே காணப்படுகிறது.

காரைநகர் புதுறோட்டைச் சேர்ந்த வி.நாகேந்திரம் தமது தாய் தந்தையின் நினைவாக 13 இலட்சம் ரூபா செலவில் இந்த அவசர சிகிச்சை நிலையக் கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளார். அவரது பணி பாராட்டத்தக்கது.

காரைநகர் - இடைப்பிட்டியைச் சேர்ந்த புரவலர் எஸ்.சிவஞானம் தனது தாய், தந்தையரின் ஞாபகார்த்தமாக இருபது இலட்சம் ரூபா செலவில் ஆய்வுகூடம், வைத்திய அதிகாரி தங்குமிடம் என்பவற்றை அமைத்துக் கொடுத்துள்ளார். இவர் காரைநகர் பிரதேச அபிவிருத்தியில் தனிமனிதனாக நின்று பல்வேறு வேலைத் திட்டங்களையும் நிறைவேற்றி வருவது பாராட்டுக்குரியதாகும்.

அமரர் இராசநாயகம் நினைவாக அவரது பிள்ளைகள் 20 இலட்சம் ரூபா செலவில் நோயாளிகள் உணவு உட்கொள்ளும் கட்டடத்தை அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

2005 ஆம் ஆண்டில் பிரித்தானியா காரை அபிவிருத்திச் சபை தனிப்பட்ட முறையில் என்னிடம் 15 இலட்சம் ரூபாவை அனுப்பி வைத்தியசாலையின் உட்பக்கத்தில் சீற் அடித்து வர்ணம் பூசி அனைத்து வேலைகளையும் செய்து கொடுத்துள்ளது.

எனவே அரசின் உதவியை எதிர்பார்த்திராது மிகுதியாக உள்ள வேலைகளையும் தனிப்பட்டவர்கள் பொறுப்பெடுத்துச் செய்து மேலும் வளம் கொண்ட வைத்தியசாலையாக மாற்ற உதவ முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கட்டட நடுகல் திரைநீக்கம் செய்து கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கே.சதாசிவம், ந.தர்மராசா உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர். இ.திருப்புகழூர்சிங்கம நன்றி நவின்றார். (10)



வரணி - கரம்பைக் குறிச்சி அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு யு.ஆர்.பிறண்ட் பவுண்டேசன் நிறுவனத் தலைவர் க.செவ்வேள் அவர்களால் கணினிகள் வழங்கப்படுவதைக் காணலாம்.

# வவுனியா தெற்கு வலயத்தில் முறைசாரா தொழிற்பயிற்சி

(வவுனியா)

வவுனியா தெற்கு கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினூடாக பாடசாலைகளை விட்டு விலகிய 210 மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக முறைசாராக் கல்வி பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சிவதாஸ் தெரிவித்தார்.

இம்முறைசாராக் கல்விப் பிரிவின் ஊடாக 72 மாணவர்கள் தையல்பயிற்சியும், 22 மாணவர்கள தோல் பொருட்கள் உற்பத்தி பயிற்சியும், 26 மாணவர்கள் மணப் பெண் அலங்காரப் பயிற்சியும், 20 மாணவர்கள் கேக் ஐசிங்கும் 20 மாணவர்கள் உணவு பதனிடல் பாதுகாப்பு பயிற்சியும், 50 மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், குளிரூட்டி திருத்துதல், ஒட்டுவேலை, மணப் பெண் அலங்காரம், கணினி, கேக் ஐசிங், வீட்டு மின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல் ஆகிய பாடநெறிகளும் மே மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சாதாரண தரப் பரீட்சை சித்தி அடைவுமட்டத்தை உயர்த்த முடிவு



(கொழும்பு)

2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவோரின் எண்ணிக்கையை 80 வீதம் வரை உயர்த்துவதற்கு உத்தேசித்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வொன்றின் அடிப்படையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில அதிக சித்தி மட்டத்தை அடைந்த 56 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேவி பாலிகா கல்லூரி, கம்பஹா ரத்னாவலீ மகளிர் கல்லூரி, மாத்தளை வித்யா கல்லூரி ஆகிய பாடசாலைகளே இதில் முதலிடங்களைப் பிடித்துள்ளன.

தேர்ச்சி மட்டம் குறைவாக காணப்படும் பாடசாலைகளில் அம்பாறை லிகினியாகம மகா வத்தியாலயம், வெலிகத்த பல்லே மலள கனிஷ்ட வித்தியாலயம் மற்றும் யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை - அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை ஆகியன முன்னிலை அடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வலிகாமம் கல்வி வலய தமிழ்மொழித்தின முடிவுகள்

(மருதனார்மடம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றோர் விபரம் வருமாறு,

பிரிவு -1 எழுத்து

அ.வெற்றிதரன் (பண்ணாகம் மெ.க.ம.வி), யு.யூலன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி), சு.ஸனோஜா (ஏழாலை மேற்கு சைவசன் மார்க்க வித்தியாலயம்).

பிரிவு -2 கட்டுரை வரைதல

இ.ஜதுசா (சுதுமலை சின்மயபாரதி வித்தி), சி.பிருந்தாயினி (மானிப்பாய் மகளிர் கல்லூரி), வெ.கெபின் (வயாவிளான் ம.ம.வி).

பிரிவு -3

த.கேசிதா (உடுவில் மகளிர் கல்லூரி), க.யசோதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சி.வர்ஷிகா (அருணோதயாக் கல்லூரி).

பிரிவு -4

கட்டுரை வரைதல்

இலக்கியம் நயத்தல்

ம.சங்கவி (வட்டு மத்திய கல்லூரி), இ.இலாவண்யா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அ.கோபிதா (கந்தரோடை த.க. வித்தி).

பிரிவு -5

சொ.தருமதன் (யூனியன் கல்லூரி), து.மேதுஷா (மகாஜனாக் கல்லூரி), சி.கோகுலவர்த்தனி (இணுவில் மத்திய கல்லூரி).

பிரிவு - 4 இலக்கணப் போட்டி

இ.கீர்த்தனி (கந்தரோடை த.க.வி), ஜெ.சுதாகரன் (அருணாசலம் வித்தி), ச.கௌசி (பண்ணாகம் மெ.க.வித்தி).

பிரிவு - 5

சி.செவ்வந்தி (பண்ணாகம் மெ.க.வித்தி), தே.பில்கிளின்ரன் (புனித ஹென்றியரசர் கல்லூரி), சி.கௌதமி (மல்லாகம் ம.வி).

பிரிவு - 5

திறனாய்வுப்போட்டி

சி.துளசி ( ஸ்கந்தவரோதயக் கல்லூரி), வ.துவாரகன் (இணுவில இந்துக் கல்லூரி), சோ.மகேஸ்வரன் (யூனியன் கல்லூரி).

பிரிவு -4 குறுநாடக ஆக்கம

தே.உமையாளினி (அருணோதயாக் கல்லூரி), சி.யதர்சிகா (ஏழாலை ஸ்ரீமுருகன்), தி.சிந்துஜன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), சி.தர்சிகா (வட்டு. மத்திய கல்லூரி).

பிரிவு -5

ஹ.விதூசனா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மு.தர்சனா (மகா ஜனக் கல்லூரி), இ.கேந்திரன் (யூனியன் கல்லூரி).

பிரிவு - 4 கவிதை

வா.விதுஷா (மகாஜனக் கலலூரி), து.ஜெகநாதன் (மானிபபாய் இந்துக் கல்லூரி), சி.நவநீதா (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

பிரிவு - 5

போ.கஜவதனி (மகாஜனக் கல்லூரி), பி.வர்ணுஜா (இளவாலை கன்னியர்மடம் ம.வி), பா.தனுஜா (பண்ணாகம் மெ.க.ம.வி), சி.மைதிலி (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

பிரிவு - 4 சிறுகதை

நே.சிந்துஜா (பண்டத்தரிப்பு பெ.உபா), பா.மச்சாயினி (உடுவில் மகளிர் கல்லூரி), ட.ஷாளினி (இராமநாதன் கல்லூரி).

பிரிவு - 5

சு.கோபிகா (மகா ஜனக் கலலூரி), வி.சுலக்சன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இ.மதுசாலினி (மாதகல் செ‌ன்.ஜோசவ் ம.வி).

பிரிவு -1 வாசிப்பு

லீ.தீபிகா (மகாஜனாக் கல்லூரி), சு.பாஸ்கரன் (மானிப்பாய் விவேகானந்தா வித்தி), நி.தர்மினி (வட்டு.மத்திய கல்லூரி).

பிரிவு - 2

சி.அபிராமி (விக்ரோறியாக் கல்லூரி), ம.மேருஜன் (அருணோதயக் கல்லூரி), நி.சுதாகரன் (அராலி சரஸ்வதி வித்தி).

பிரிவு -1

ஆக்கத்திறன் வெளிப்பாடு

கு.பிறையாழினி (மானிப்பாய சோதிவேம்படி வித்தி), சூ.ஆதவன் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வித்தி), தே.தவரூபன (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வித்தி). (06)

(தொடரும்...)

# பெண்களுடன் தவறாக நடந்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

(மன்னார்)

மன்னாரில் பெண்களுடன் தவறாக நடந்துகொள்ளும் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு எதிராக எதிர்வரும் காலங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஷார தலுவத்த தெரிவித்தார்.

மன்னாரில் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிச் சாரதிகளில் ஒரு சிலர் பெண்களுடன் தவறாக நடந்துகொள்வதாகவும் பெண்களைப் பாலியல் ரீதியாக துன்புறுத்துவதாகவும் கூறி பொலிஸாருக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் மன்னார் தனியார் பஸ் நிலையத்திற்கு முன்பாக சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. இதன் போதே மன்னார் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துஷார தலுவத்த இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஒரு சில முச்சக்கர வண்டிச் சாரதிகள் பெண்களுடன் தவறாக நடந்துகொள் வதாகவும் இது தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன. இநத நிலையில், எதிர்வரும் காலங்களில் முச்சக்கரவண்டிச் சாரதிகளின் நடவடிக்கைகள் இரகசியமாக அவதானிக்கப்பட்டு பெண்களுடன் தவறாக நடந்துகொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன், இவ்வாறான முச்சக்கரவண்டிச் சாரதிகளின் அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்றார்.

# 14 மாணவரை ஏற்றிச்சென்ற ஓட்டோ சாரதி கைதானார்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்கள் 14 பேரை முச்சக்கரவண்டியில் ஏற்றிச் சென்ற சாரதி ஒருவர் ஹசலக்க பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். பாதுகாப்பற்ற முறையில் ஐந்து வயது தொடக்கம் 13 வயது வரையான மாணவர் கள் இவ்வாறு முச்சக்கரவண்டியில ஏற்றப்பட்டிருந்ததாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவ்வாறு மாணவர்கள் ஏற்றப்பட்ட முச்சக்கரவண்டியின் சாரதி, ஹசலக்க ஹினகஸ்பிட்டிய பகுதியில் கைதுசெய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்படுவதற்கு சந்தர்ப்பமளிக்கும் வகையில் செயற்படும் பெற்றோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

உடற்கல்விப் பாடம் ஒன்றினைக் கற்பதன் மூலம் மாணவரின் விருத்தியாகும். பண்புக்கெதிராக (√) எனவும், பொருத்தமற்ற பண்புக்கெதிராக (X) எனவும் அடையாளமிடுக.

| | |
|---|---|
| 56) அடிப்படையான இயக்கங்கள் வளர்த்தல் | |
| 57) வெற்றியை மட்டும் எதிர்கொள்ளும் திறன் வளரும் | |
| 58) நரம்பு, தசை ஒத்தியங்கும் தன்மை விருத்தியாகும் | |

கீழே சில வாத்தியக் கருவிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவை எந்த வகையினுள் அமைகின்றனவோ அவற்றுக்குக் கீழே (X) என அடையாளமிடுக.

| | பெயர் | வளிநிரல் கருவி | நரம்புக் கருவி | தோற்கருவி |
|---|---|---|---|---|
| 59) | மேளம் | | | |
| 60) | வீணை | | | |
| 61) | புல்லாங்குழல் | | | |
| 62) | வயலின் | | | |
| 63) | உடுக்கு | | | |
| 64) | நாதஸ்வரம் | | | |

கீழே தரப்பட்ட மின்சுற்றுப் பெட்டியை அவதானித்து விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.




ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்படும் பகுதிகளின் விஞ்ஞானப் பெயர்களை எழுதுக.

65) A (..............................................)

66) B (..............................................)

67) C (..............................................)

68) D (..............................................)

கீழ்வரும் விளக்குகள் ஒளிர்வதற்கு இணைக்கப்பட வேண்டிய எழுத்துக்களை எழுதுக.

69) மஞ்சள் (..............................................)

70) சிவப்பு (..............................................)

71) பச்சை (..............................................)

கரை அமைப்புக்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தக் கூடிய பாரம்பரிய கரை வடிவமைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றையும் குறிப்பிடும் பெயர்களை அடைப்புக்குறிக்குள்ளிருந்து தெரிந்து எதிரே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

72)  (..............................................)

73)  (..............................................)

74)  (..............................................)

75)  (..............................................)



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 59



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

கீழ்வருவதை வாசித்துப் பொருத்தமான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.

> மங்கையர்களே,
> ஆடவர்களே,
> கன்னியர்களே,
> காளையர்களே, உங்கள் கூந்தல் கன்னங்கரேலென்று வளர வேண்டுமா?
> நறுமணம் கமழ வேண்டுமா? அழகாக மிளிர வேண்டுமா?
> எங்கள் அசோகா சிகைக்காய் பொடியை வாங்கிப் பாவித்துப் பயனடையுங்கள்
> எல்லா இடங்களிலும் கிடைக்கும்
> அசோகா இன்டஸ்ரீஸ்,
> பண்டாரவத்தை, கடவத்தை

01) மேலே காட்டப்பட்டுள்ளது,
1) அழைப்பிதழ் 2) விளம்பரம் 3) அறிவித்தல் 4) சுவரொட்டி
(..............................................)

02) இதை வெளியிட்டவரின் நோக்கம்
1) எல்லோரது கூந்தல்களையும் பாதுகாத்தல்
2) எல்லோருக்கும் அசோகா சிகைக்காய் பொடியை தெரியப்படுத்தல்
3) அசோகா சிகைக்காய் பொடியின் விற்பனையை அதிகரித்தல்
4) எல்லோருக்கும் நன்மை செய்தல் (..............................................)

03) “கன்னியர்” என்னும் சொல்லின் எதிர்ப்பால் சொல்லை பந்தியிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.
(..............................................)

04) “கூந்தல்” என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. (..............................................)

05) பெயர்ச்சொல் ஒன்றைத் தெரிவுசெய்து எழுதுக. (..............................................)

06) “நறுமணம்” என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. (..............................................)

07) “பொடி” என்பதன் ஒத்த சொல்லை எழுதுக. (..............................................)

08) வினையெச்ச சொல் ஒன்றை எழுதுக. (..............................................)

09) இதை வெளியிட்ட நிறுவனம் எது? (..............................................)

10) இந்த நிறுவனம் எங்கே அமைந்துள்ளது? (..............................................)

11) “கூந்தல்” என்பதைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் எது? (..............................................)

இப்பாடலை வாசித்து சரியான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

> “தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
> சாலைக்கு போ என்று சொன்னா உன் அன்னை
> சிலை போல ஏனங்கு நின்றாய்? - நீ
> சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்”

12) பிள்ளையைப் பாடசாலைக்குத் தயார்ப்படுத்தியவர் யார்? (..............................................)

13) பாடசாலைக்குச் செல்ல விரும்பாத பிள்ளை எதற்கு ஒப்பிடப்படுகின்றது? (..............................................)

14) இப்பாடல் ஆண் பிள்ளையையா? பெண் பிள்ளையையா குறிக்கின்றது? (..............................................)

கீழ்வரும் சொற்களைப் பன்மைச் சொல்லாக எழுதுக.

15) போ : .............................................. 16) சொன்னார் : ..............................................

கீழ்வரும் சொற்களின் எதிர்ப்பால் சொல்லை எழுதுக.

17) அன்னை : .............................................. 18) சிறுமி : ..............................................

**கீழ்வரும் சொற்களின் ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

19) பூ : ............................................ 20) நீ : ..................................................

**விளையாடுதல், தொழில் செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பாடப்படும் பாடல் அடிகள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் பாடப்படும் சந்தர்ப்பங்களின் பெயர்களை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

21) ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே (....................................................)

22) உலகத்து நாயகியே தேவி தேவி அம்மா தேவி தேவி
ஊழிக்கூத்து ஆடனணை மாரி தேவி (....................................................)

23) காடுகள் பற்றைகள் வெட்டினோம் - பெரும்
கட்டைகள் தீக்கிரையாக்கினோம் (....................................................)

24) பந்தெறிந்தாட எல்லோரும்
பாங்குடனே வந்து சேருவோம் (....................................................)

25) ஆண் பனையில் நுங்கே அணில் கோதா மாம்பழமே
கும்பிட்டு நான் கேட்பேன் குஞ்சரமே - கண்வளராய் (....................................................)

26) சிறு நண்டு மணல் மீது படமொன்று கீறும்
சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும் (....................................................)

27) பவள மேனியான வயலில் நாற்றைப்
பாடி நட வாரும் தோழர்களே (....................................................)

**சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

28) 

நிழற்றப்படர்த பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதுக.

(....................................................)

29) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பங்கு கீழ்வருவனவற்றுள் எது?

25/100 150/200 5/25 25/50

(....................................................)

30) 999 999 என்னும் எண்ணை சொற்களில் எழுதுக. (....................................................)

31) 1, 3, 6, 10 என்னும் கோலத்தில் 20 ஆக வரும் எண் யாது?

(....................................................)

32) 25 கிராம் தேயிலை ரூபா 4.50 எனின், 110 கிராம் தேயிலையின் விலை என்ன?

(....................................................)

33) மீற்றர் ரூபா 70.00 படி 2.5 மீற்றர் வெள்ளைத் துணியும் டசின் ரூபா 48.00 படி 4 பென்சில்களும் வாங்கிய ஒருவர் ரூபா 200 தாள் காசு ஒன்றினைக் கொடுப்பின் கடைக்காரர் அவருக்குக் கொடுக்கும் மீதிப் பணம் எவ்வளவு? (....................................................)

34) 5 மனிதர்களுக்கு 6 நாட்களுக்குப் போதுமான உணவு 3 மனிதர்களுக்கு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

(....................................................)





35) 3 கிலோகிராம் நிறைகொண்ட கம்பியாலான கூடு ஒன்றினுள் ஒரு கிலோகிராம் நிறைகொண்ட கிளியொன்று பறக்கிறது. அப்பொழுது இரண்டினதும் நிறை எவ்வளவு?

(....................................................)

36) சதுர வடிவமான காணி ஒன்றைச் சுற்றிக் கம்பி வேலி இடப்படவுள்ளது. பக்கம் ஒன்றுக்கு 10 தூண்கள் தேவைப் படின் முழுமையாக எத்தனை தூண்கள் தேவைப்படும்?

(....................................................)

37) பண்டாரவின் வயது 14, சுமணதாச பண்டாரவிலும் 6 வயது மூத்தவன். ஆரியதாச சுமணதாசவிலும் 2 வயது இளையவன். ஆரியதாசவின் வயது என்ன?

(....................................................)

**கீழே தரப்பட்டுள்ள உருக்களை நன்கு அவதானித்து அட்டவணையில் உள்ள இடைவெளியில் எழுதப்பட வேண்டியதைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**



உரு - 1



உரு - 2

| | இயல்பு | உரு - 1 | உரு - 2 |
|---|---|---|---|
| 38) | விளிம்புகளின் எண்ணிக்கை | 12 | ? |
| 39) | உச்சிகளின் எண்ணிக்கை | ? | 4 |
| 40) | உச்சிகளின் எண்ணிக்கை | 6 | ? |
| 41) | பெயர் | சதுரமுகி | ? |
| 42) | ஒருமுகத்தின் பரப்பளவு 6 $cm^2$ எனின் மொத்தப் பரப்பளவு | 36cm | ? |

43) வரன் கிழக்கு நோக்கி நின்று 5 மீற்றர் முன்னோக்கிச் சென்றபின் இடதுபக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச் சென்று பின் வலது பக்கம் திரும்பி 5 மீற்றர் முன்னோக்கிச் சென்றான். இதனை அருகேயுள்ள கூட்டினுள் வரைந்து காட்டுக.

44) 1.132, 1.004, 1.5, 1.148 இல் மிகவும் பெரிய எண் எது?

(....................................................)

45) * = X இனையும் / = ÷ இனையும் குறிப்பின் 5 * 6/3 இன் பெறுமானத்தை எழுதுக.

(....................................................)

**கீழே சில தகவல்கள் முதலாவது கூட்டில் தரப்பட்டுள்ளன. அவற்றோடு மிகவும் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள தகவல்கள் மூன்றாவது கூட்டில் தரப்பட்டுள்ளன. முதலாவது கூட்டில் தரப்படும் தகவல்களுக்குப் பொருத்தமான விடையை மூன்றாவது கூட்டில் இருந்து தெரிந்து எடுத்து அதற்குரிய இலக்கத்தை இரண்டாவது கூட்டில் எழுதுக. உமது வசதிக்காக முதலாவது வரிசை நிரப்பப்பட்டுள்ளது.**

| | ஆதாரத் தகவல் | சரியான விடையின் இலக்கம் | விடைக்குரிய தகவல் |
|---|---|---|---|
| | கொப்பளிப்பான், சின்னமுத்து, கண்நோய், டெங்குக்காய்ச்சல் | 4 | 1) பண்டைய ராசதானிகள் |
| 46) | மகாத்மா காந்தி, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, அநாகரிகதர்மபால | | 2) அரிய அங்கிகள் அழிவடைதல் |
| 47) | ருகுணுரட்டை, மாயரட்டை, ராயரட்டை | | 3) நோய் காவி |
| 48) | பாராளுமன்றம், மாகாணசபை, மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை | | 4) தொற்றுநோய்கள் |
| 49) | பழப்பாகு, பழச்சாறு, புளியிட்ட மீன், ஊறுகாய் | | 5) நோய் ஆக்கி |
| 50) | மரம் வெட்டல், கிருமி நாசினிப் பிரயோகம் | | 6) விளையாட்டு விழா |
| 51) | சிலந்தி வலை, தேன்கூடு | | 7) விறகுக்கான மாற்றுச் சக்தி |
| 52) | ஈ, நுளம்பு | | 8) பாதுகாக்கப்பட்ட உணவுவகை |
| 53) | பற்றீரியா, வைரஸ் | | 9) பல்வேறு நிர்வாக நிறுவனங்கள் |
| 54) | ஒலிம்பிக் தீபம் ஏற்றுதல் | | 10) இம்சைப்படுத்தலை எதிர்த்தவர்கள் |
| 55) | சூரிய அடுப்பைப் பயன்படுத்துதல் | | 11) சூழற் புதுமை |

# எதிர்கால சந்ததியினருக்காக சூழலை பாதுகாக்க வேண்டும்

## யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் ரவி

(கிரு,ஸாரா)

ஒவ்வொரு மனிதனும் தனக்குப் பின்னுள்ள சந்ததியினரை நினைவில் கொண்டு அவர்களின் ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிவகுக்கும் வகையில் சூழலைப் பாதுகாத்துப் பேண வேண்டும் என யாழ்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் ச.ரவி தெரிவித்தார்.

யாழ்பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம்





புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற 'உலக புவி தினம்' நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2009ஆம் ஆண்டு நடைபெற்ற கணக்கெடுப்பின்படி, உலக சனத்தொகை 700 மில்லியனைக் கடந்துள்ளது. இதுவும் புவி வெப்பமடைவதற்கு ஒரு காரணம். 16 தொடக்கம் 55 வயதுக்கு உட்பட்டவர்கள் அனைத்து வளங்களும் உடையவர்கள் எனக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் பயன்பட்டால் மட்டுமே வளமானவர்களாகக் குறிப்பிடலாம். எனவே இளைஞர்கள் இயற்கையுடன் இணைந்து செயற்பட வேண்டும்

'நான் உலகத்தை மாற்றுவதற்கு தயாராக உள்ளேன் ஆனால் என்னை மாற்றுவதற்கு தயாராக இல்லை' என புவியுடனும் மக்கள் போட்டி போட்டுக் கொள்கின்றனர். இதனால் புவியும் மனிதனும் பகை கொள்கின்றன. மனிதன் இயற்கைக்கு தீங்கு விளைவிக்க நினைத்தால் இயற்கையும் அவனுக்கு தீங்கே விளைவிக்கும். இதேவேளை யாழில் தற்போது வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளமையும் சூழல் மாசடைவதற்கு மற்றுமொரு காரணம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், கிராமம் தோறும் தெரிவு செய்யப்பட்ட வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்றுகளும் அவற்றுக்கான பசளைகளும் வழங்கப்பட்டன.

நல்லூர் பிரதேச உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், நல்லூர் பிரதேச செயலகர் பா.செந்தில்நந்தனன், யாழ். மாவட்ட சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் திருமதி ச.விஜிதா உட்பட பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (சி)

# தென்னிலங்கையரை கவரும் பனை உற்பத்திப் பொருட்கள்



யாழ்ப்பாண பனை உற்பத்திப் பொருட்களை தென்னிலங்கை மக்கள் மற்றும் வெளிநாட்டவர்களே அதிகம் கொள்வனவு செய்வதாக யாழ். சந்தை உள்ளூர் விற்பனை நிலைய வியாபாரிகள் தெரிவித்தனர்.

யாழ்.மக்கள் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக்கிலான பொருட்களையே அதிகம் வாங்கிக் கண்ணாடிப் பெட்டிக்குள் அழகுக்காக அடுக்கி வைக்கின்றனர். ஆனால், தென்னிலங்கை மக்கள் பனை உற்பத்திப் பொருட்களையே கண்ணாடிப் பெட்டிக்குள் அடுக்கின்றனர் என்றார் சி.பழனிவேலு என்ற வியாபாரி.

பனை ஓலையால் பின்னப்பட்ட இடியப்பத் தட்டு, பாய்கள், பெட்டிகள், கடகம், சுளகு, கூடைகள், விசிறிகள், மூங்கில் பிரம்புகள் என்பன மட்டுமன்றி, கண்ணைக் கவரும் வகையில் வர்ணங்கள் பூசப்பட்ட ஓலையால் தயாரிக்கப்பட்ட அலங்கார சுவர் மாட்டிகள், பென்சில் பை, கைத்தொலைபேசிக் கவர், பூக்கூடைகள், பென்சில் பேர்ஸ், கைப்பைகள், தொப்பிகள் என ஏராளமான பனை உற்பத்திப் பொருட்கள் யாழ்ப்பாணச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தச்சன்தோப்பு, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை, இருபாலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்தே இவற்றைக் கொள்வனவுசெய்து விற்பனை செய்வதாகவும், யாழ்.சந்தையில் 15இற்கும் மேற்பட்ட கடைகளில் இவை விற்பனை செய்யப்படுவதாகவும் வியாபாரிகள் குறிப்பிட்டனர்.இதேவேளை, சில அலங்கார சுவர் மாட்டிகள், பென்சில் பை, கைத்தொலைபேசிக் கவர், பென்சில் பேர்ஸ், கைப்பைகள், தொப்பிகள் போன்ற கைவினைப்பொருட்ககளை தென்னிலங்கை மக்களே தமக்கு விலைக்குத் தருவதாகவும் அவர்கள் கூறினர். (சி)



# கல்வியங்காடு வீரபத்திரர் ஆலயக்கொடியேற்றம்

(நிரு)

யாழ். கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.



நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆலயத்திற்கு அருகிலுள்ள வைரவர் ஆலயத்திலிருந்து மாலை 3.00 மணிக்கு கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு, நேற்று அதிகாலை 5.30 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி காலை 8 மணிக்கு வசந்த மண்டப்பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு கொடியேற்றப்பட்டது.

தொடர்ந்து மே 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கைலாய வாகனத்திருவிழா, 4ஆம் திகதி வியாழக கிழமை சப்பறத் திருவிழா என்பன நடைபெற்று, 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு அபிஷேகம் மற்றும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு இரத ஆரோகணத்துடன் தேர்திருவிழாவும் நடைபெறவுள்ளது. மறுநாள் சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெற்று அன்றையதினமே மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து மாலை 5.15 மணிக்கு கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருக்கல்யாணம் நடைபெற்று மாலை 6.30 மணிக்கு சுவாமி வெளிவீதி உலாவரும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. நேற்று நடைபெற்ற கொடியேற்ற நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். (சி)

# பதிவிறக்கப் பெட்டகம்

சினிமா இங்கு கேளிக்கைப் பொருளாகவும், வியாபாரப் பண்டமாகவும்தான் இருக்கிறது. அது கலை; நுண்ணுணர்வைக் கூர்தீட்டும் கலை; மனித ஆத்மாவோடு உறவாடும் கலை; சமூக விழுமியங்களை முன்னிறுத்தும் கலை என்று பெரும்பாலோருக்குச் சொல்லிக் கொடுக்கப்படவில்லை. பராக்குப் பார்க்கும் சின்னப் பையன்களின் மனோபாவத்தைத் தாண்டிப் பெரும்பாலான தமிழ் சினிமாக்கள் வெளிவரவில்லை.

**– பிரபஞ்சன்**

பார்வையாளன் அடையாளப்படுத்திக் கொள்கிற நாயகர்கள் அல்லது கதாபாத்திரங்கள் தமிழ்த்திரையில் வர மறுக்கிறார்கள்.

**– நாஞ்சில்நாடன்**

இன்றைய சராசரித் தமிழ்ப்படத்தில் கூட பல நடிகைகள், அவர்களுக்காக வடித்துத் தந்த எளிமைப்படுத்தப்பட்ட பாத்திர வார்ப்பையும் மீறிச் சிக்கல்களைப் பிரதிபலிக்குமாறு நடித்திருக்கிறார்கள். நடிக்கிறார்கள்... ஆனால் தமிழ் சினிமா உலகம் இன்னும் நாயகனுக்கே உரியதாக உள்ளது. தமிழ் சினிமா நாயகர்கள் விதிவிலக்கில்லாமல் தமிழ் சினிமாவை பொழுபோக்குக்கு மேல் உயரமுடியாத படி பார்த்துக் கொள்கிறார்கள்.

**– அசோகமித்திரன்**

சினிமா உலகில் ஒரு பெண்ணானவள் அழகுக்கும் கவர்ச்சிக்கும் மட்டுந்தானா தேவைப்படுகிறாள்? இது ஒரு விதத்தில் பெண்ணுக்கு இழைக்கப்படுகிற அவமரியாதைதான். சினிமாவுக்குரிய முகம், சினிமாவுக்குரிய உடல்கட்டு கேட்பதெல்லாம் மோசமான வியாபார பேரம் போல எனக்குத் தெரிகின்றது. பெண்ணுடைய அழகை மட்டும் வைத்துச் செய்யப்படுகின்ற இந்த மோசமான வியாபாரத்தை ஒரு அவமானமாகவே நான் கருதுகின்றேன். இதை உடைத்தெறிய வேண்டும் என்ற ஆவேசம் என் மனதில் உருவான போதுதான் பெண் அடிமைத்தனத்தின் கோரமான போக்கினை நான் அப்பட்டமாக உணரத் தலைப்பட்டேன். அதுவும் ஆண் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிற சினிமாத் துறையில் பெண்ணுரிமையின் அவசியத்தை வலியுறுத்துகிற மன உணர்வையும் எனக்கு உறுதியாக உண்டாக்கிற்று.

**– ஷப்னா ஆஸ்மி**

என் வெற்றுடலை எவ்வளவு நாட்களுக்கு நான் காட்டிக் கொண்டிருப்பேன்? இதனால் நான் அலுப்பு மட்டும் அடையவில்லை, எல்லை மீறிய கவலையும் கொள்கிறேன். சினிமா உலகை விட்டு ஒழிந்து போனால் என்ன என்றுகூட பலமுறை தோன்றும்...

**– மர்லின் மன்றோ**

திருப்பூரிலிருந்து சேலத்துக்கு இரண்டு மணி நேரத்தில் செல்லலாம். ஆனால் நான் சென்ற பஸ் முழுசாக ஐந்து மணி நேரம் எடுத்துக் கொண்டது. இரண்டு சினிமா போட்டார்கள். ஒருவன் இரண்டரை மணி நேரமாக பிள்ளை பெற்றுக் கொள்ள முயற்சி செய்வதுதான் கதை. நீலப் படம் என்று நினைத்து விடாதீர்கள். எஜமான் என்று ஒரு ரஜினி படம்.

**– சாரு நிவேதிதா**

1955–இல் வெளியான "கணவனே கண்கண்ட தெய்வம்" படத்தின் வெற்றியைத் தொடர்ந்து வந்த படங்கள்: மங்கை யர் திலகம் (1955), மாதர்குல மாணிக்கம் (1956), பெண்ணின் பெருமை (1956), எங்கள் வீட்டு மகாலட்சுமி (1957), மாங்கல்ய பாக்கியம் (1958), மக்களைப் பெற்ற மகராசி (1958).

1955 கணவனே கண்கண்ட தெய்வம் வெளியான காலத்தில், சுயமான வருவாயும் சினிமா போன்ற பொழுதுபோக்குக்காக செலவு செய்ய முடிவெடுக்கும் அதிகாரமும் பெற்ற பெண்கள் மிகமிகக் குறைவு. குரூபியானாலும் குறைபாடு உடையவனானாலும் கணவனே தெய்வம் என்ற கருத்தை வலியுறுத்தும் இப்படத்தைக் குடும்பத்தினர் அனைவரும் பார்க்க வேண்டுமெனக் குடும்பத் தலைவன் விரும்பியதில் வியப்பில்லை.

**– அசோகமித்திரன்**

பத்திரிகை மட்டுமில்லை, சினிமாவை எடுத்துக் கொள்ளுங்கள்... ஏதோ நாலு பேர் இடத்தைப் பிடித்துக்கொண்டு, தங்களுக்குத் தெரிஞ்சதை, 'மக்கள் இதைத்தான் ஏத்துக்குவாங்க' என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாலு பேருக்கு என்ன தெரியுமோ அதுதான் வெகுஜன ரசனையாகக் காட்டப்படுகிறது.

**– சா.கந்தசாமி**

தமிழ்ப் படங்கள் பார்க்க வேண்டுமென்றால் தியேட்டர் போய்வர ஒரு விடுமுறை நாளைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அளவு தியாகத்துக்கு அவை அருகதை உள்ளவையாக இல்லை.

**– ஆதவன்**

# இந்தியாவில் தயாரிக்கப்பட்ட “ரிசாட் - 1” விண்ணில் பாய்ந்தது



இந்தியாவின் அதிநவீன உளவுவகை செயற்கைக்கோள் “ரிசாட் - 1” ஆந்திரப் பிரதேசம் ஸ்ரீஹரிக்கோட்டாவில் இருந்து நேற்று அதிகாலை 5.47இற்கு வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்தச் செயற்கைக் கோள் இரவு நேரம் மற்றும மேகமூட்டமான காலத்திலும் கூட துல்லிய மாகப் புகைப்படங்களை எடுக்கும் வசதி கொண்டது.

“ரிசாட் - 1” செயற்கைக்கோள் 10 ஆண்டு காலமாக விஞ்ஞானிகளின் கடும் உழைப்பில் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்ட ஒன்று. இதற்கு முன்னர் இஸ்ரேல் உதவியுடன் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பத்தை இதுபோன்ற ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்திவந்தது. இந்த செயற்கைக்கோள், அகமதாபாத்தில் உள்ள இஸ்ரோ தொழில்நுட்பப் பிரிவில் உருவாக்கப் பட்டுள்ளது.

தற்போதைய ரிமோட் இமேஜிங் செயற்கைக்கோள் ரிசாட் -1 விண்ணில் செலுத்தப்பட்டதன் மூலம் பூமியின் பரப்பை துல்லியமாகக் கண்காணிக்க இந்தியாவுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் 1 மி.மீ நீள, அகலமுள்ள பொருட்களையும் துல்லியமாக படம்பிடிக்க முடியும். நிலப் பரப்பில் கோதுமை, நெல் உள்ளிட்ட விவசாய பயிர்ப் பரப்பு எவ்வளவு என்பதையும் கண்டறிந்து அரசுக்கு தெரிவிக்க முடியும். அதன் அடிப்படையில் அரசு விவசாய மேம்பாட்டுத் திட்டங்களை அறிவிக்க முடியும். மேலும், பயங்கரவாதிகள் நடமாட்டம், குற்றச் செயல் தடுப்பு, இயற்கைச் சீற்றங்களை முன்கூட்டியே அறிதல், வெள்ளம், ஆறுகளில் நீர் வரத்து உள்ளிட்டவற்றை கணிக்க முடியும்

# இலங்கை குறித்த இந்திய நிலை சரி என்கிறார் அமைச்சர் வாசன்

(விழுப்புரம்)

இலங்கை பிரச்சினையை பொறுத்தவரை மத்திய அரசு சரியான அணுகுமுறையை கையாண்டு வருவதாக மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தது. அதனையடுத்து ஈழத்தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்பதற்காக எதிர்க்கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான எம்.பி.க்கள் குழுவை மத்திய அரசு இலங்கைக்கு அனுப்பி வைத்தது. இந்தப் பயணம் அங்குள்ள தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கு உத்தரவாதம் கொடுக்கும்.

இலங்கை பிரச்சினையைப் பொறுத்தவரை மத்திய அரசு சரியான அணுகுமுறையைக் கையாண்டு வருகின்றது. இலங்கை சென்று திரும்பிய குழு அளிக்கும் அறிக்கையை வைத்து பிரச்சினைகளுக்கு முழுமையாகத் தீர்வு கண்டு, தமிழர்களின் வாழ்வாதாரம் மேம்பட மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும்.

தி.மு.க., அ.திமு.க ஆகிய 2 கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்கள் இலங்கை சென்ற குழுவில் இடம்பெறாதது வருந்தத்தக்கது என்றார்.

இந்தியச் செய்திகள்



பாலின் விற்பனை விலையை அதிகரிப்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தலைநகர் புதுடில்லியில் நிலத்தில் பாலை ஊற்றும் பால் வியாபாரிகள்.

# இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவதே நோக்கம்

## ஐ.நா. செயலர் தெரிவிப்பு



இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவதே எனது பயணத்தின் முக்கிய நோக்கமென்று ஐ.நா பொதுச் செயலாளர் பான்.கி.மூன் தெரிவிததுள்ளார்.

ஐ.நா.வுக்கு இந்தியா ஒரு மதிப்புமிக்க, வலுவான கூட்டாளியாகும். எனது பயணத்தின்போது இந்த உறவை மேலும் வலுப்படுத்துவேன் என்றும் கூறியுள்ளார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, உலக விவகாரங்களில் முக்கிய பங்காற்றி முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

அரபு நாடுகள், வட ஆபிரிக்கா போன்ற ஜனநாயகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறநாடுகளுக்கு இந்தியா உதவ வேண்டும்

அந்த நாடுகளுடன் தனது ஜனநாயக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், அவற்றுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும்.

ஐ.நா.வுக்கும், இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் பான்.கி.மூன் கூறியுள்ளார்.

# ஜனாதிபதி வேட்பாளர் நியமனம்; கருணாநிதிக்கு தூதுவிட்ட சோனியா





(சென்னை)

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர் குறித்து கூட்டணி கட்சியான தி.மு.க.வின் தலைவர் கருணாநிதியுடன் பேச காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சிறப்புத் தூதுவரை அனுப்பியுள்ளார்.

குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்கள் கூட இல்லை. இந்நிலையில் குடியரசுத் தலைவர் வேட்பாளரை தேர்வு செய்வதில் அனைத்து அரசியல் கட்சிகளும் முனைப்பாக உள்ளன. மத்தியில் ஆளும் காங்கிரஸ் கட்சியும் குடியரசுத் தலைவர் வேட்பாளரைத் தேர்வு செய்வதில் தீவிரமாக உள்ளது. மேலும் இது தொடர்பாக கூட்டணி கட்சிகளின் ஆதரவை திரட்டி வருகிறது.

இந்நிலையில் குடியரசுத் தலைவர் தேர்தல் தொடர்பாக ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள திமுகவின் தலைவர் கருணாநிதியை சந்தித்து பேச காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி சிறப்புத் தூதுவரை அனுப்பி பேச்சு நடத்தியுள்ளதாகத் தெரிகிறது.

துணை குடியரசுத் தலைவர் ஹமீத் அன்சாரியை வேட்பாளாராக்க காங்கிரஸ் திட்டமிடுவதாகக் கூறப்படுகிறது. ராஷ்ட்ரீய ஜனதாதள தலைவர் லாலு பிரசாத் யாதவ் ஏற்கனவே ஹமீது அன்சாரிக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே அ.தி.மு.க தலைவரும், தமிழக முதல்வருமான ஜெயலலிதா, மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, சமாஜ்வாடி கட்சி தலைவர் முலாயம் சிங் யாதவ் ஆகியோர் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மீண்டும் குடியரசுத் தலைவராக வேண் டும் என்று விரும்புகிறார்கள்.

அப்துல் கலாம் இல்லாவிட்டால் பாஜக மூத்த தலைவரும் முன்னாள் மக்களவை சபாநாயகருமான நஜ்மா ஹெப்துல்லாவை நிறுத்த வேண்டும் என ஜெயலலிதா கூறி வருவதாகத் தெரிகிறது.

இவர்கள் தவிர ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் உள்ள தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் அரசியல் தலைவர் அல்லாத ஒருவர் குடியரசுத் தலைவராக வேண்டும் என்று தனது விருப்பத்தை தெரிவித்துள்ளார். ஆனால், கலாம் - நஜ்மா ஹெப்துல்லா இருவருமே சேனியாவுக்கு சரிப்பட்டு வராதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தவறில்லை

(புதுடில்லி)

குறிப்பிட்ட சில சம்பவங்களின்போது மனைவியைக் கணவன் அடிப்பதில் தவறில்லையென 15 முதல் 49 வயதுக்குட்பட்ட 50 சதவீத இந்தியப் பெண்கள் கருத்து தெரிவித்துள்ளனர். யுனிசெப் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மனைவியை அடிப்பதில் தவறில்லை என்று 15 முதல் 19 வயதுக்குட்பட்ட 57% இந்திய இளைஞர்களும், 53 சதவீத இளம்பெண்களும் கருத்து தெரிவித்துள்ளனர்.

# விளக்கம் தேவை



இலங்கையில் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து மத்திய அரசு விளக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை அளிப்பதாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதி அளித்ததாக இந்திய நாடாளுமன்றக் குழுவினர் தெரிவித்திருந்தனர்.

எனினும் அவ்வாறு எந்த உறுதி மொழியையும், தான் அளிக்கவில்லை என்று மகிந்த ராஜபக்ஷ ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

எனவே இலங்கையில் இந்திய நாடாளுமன்றக் குழுவினர் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து மத்திய அரசு விளக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.








தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பெயர் : ஜெகதீஸ்வரன் யதுர்ஷன்

முகவரி : ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு; கிலானிக்கு 30 வினாடிகள் சிறை



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு 30 வினாடிகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஸர்தாரி மீதான ஊழல் வழக்கினை விசாரிக்க பிரதமர் கிலானி மறுத்து வந்தார். இது தொடர்பாக பாகிஸ்தான் உச்ச நீதிமன்றத்தில் கிலானி மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கிலானிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டதுடன் 7 நீதிபதிகள் கொண்ட குழு விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி தலைமையில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பின்னர் கிலானி கூறுகையில், என் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உயர்நீதிமன்றத்தில் ஆஜராக உள்ளேன். எப்போதுமே நீதித்துறைக்கு உரிய மரியாதை அளித்து வருகிறேன் என்றார்.

இந்நிலையில் பிரதமர் கிலானி நேற்று ஆஜரானார். அவருடைய வழக்கில் நீதிபதிகள் அவரைக் குற்றவாளி என அறிவித்தனர்.

இருப்பினும் கிலானிக்கு அடையாளத் தண்டனையாக 30 வினாடிகள் சிறைதண்டனை வழங்கப்பட்டது.

# நான்கு ஊடகவியலாளர் பிரேசிலில் படுகொலை

பிரேசிலில் அண்மைக்காலமாக ஊடகவியலாளர்கள் கொல்லப்படுவது அதிகரித்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் பிரேசிலில் நான்கு ஊடகவியலாளர்கள் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தக் கொலைகள் குறித்து பிரேசில் அரசாங்கம் விசாரணைகளை நடத்த வேண்டும் என்று சர்வதேச ஊடக அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன. அரசியலில் இடம்பெறும் ஊழல்கள் குறித்த செய்திகளை வெளியிட்ட ஊடகவியலாளர்களே இவ்வாறு கொல்லப்பட்டுவருவதாக சர்வதேச அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

பிரேசிலில் ஊழல் மோசடிகளுடன் தொடர்புடையதாகத் தெரிவிக்கப்பட்டு, முக்கிய அமைச்சர்கள் பலர் இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிரிய அரசின் அத்துமீறல் குறித்து ஐ.நா. கவனம் செலுத்தவேண்டும்

## – பிரான்ஸ் கோரிக்கை

சிரியாவில் படையினரைப் பயன்படுத்துவது குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை கட்டாயம் கவனம் செலுத்த வேண்டுமென பிரான்ஸ் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா பின்புலத்துடன் முன்னெடுக்கப்படும் வன்முறைகளை நிறுத்துவதற்கான சமாதானத் திட்டம் தோல்வியடையுமாயின் இது குறித்து கவனம் செலுத்த வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தம்மை மீறி சிரிய அரசாங்கம் செயற்படுவதை அனுமதிக்க முடியாது என பிரான்ஸ் வெளிவிகார அமைச்சர் அலையின் ஜூபி கூறியுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச பிரதிநிதி கொபி அனானின் சமாதானத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகரங்களில் இருந்து படையினர் மற்றும் பாரிய ஆயுதங்களை சிரியா மீளப்பெற வேண்டுமென கொபி அனான் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு வார காலப் பகுதிக்குள் 300 ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் சிரியாவில் நிலை நிறுத்தப்பட வேண்டுமென அலையன் ஜூபி வலியுறுத்தியுள்ளார்.

# வேண்டாம் அணுப்பரிசோதனை; வடகொரியாவிற்கு அறிவுறுத்து

சர்ச்சைக்குரிய அணுப் பரிசோதனைகளில் ஈடுபட வேண்டாமென வட கொரியாவுக்கு சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிராந்தியத்தில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதுவே, தமது எதிர்பார்ப்பு என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரியப் பிராந்தியத்தின் அமைதியை குழப்பும் எந்தவொரு நடவடிக்கைக்கும் தாம் இடமளிக்கப் போவதில்லை எனவும் சீன வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மூன்றாவது அணுப் பரிசோதனையை வட கொரியா மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், சீனாவின் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அணுத்திட்ட விவகாரங்களை அடுத்து, வட கொரியா மீது மேற்குலக நாடுகள் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. எனினும் சீனா வடகொரியாவுக்கு ஆதரவான கருத்துக்களையே தெரிவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானும் ஏவுகணைச் சோதனை

பாகிஸ்தான் 'ஷாகின்-1 ஏ' என்ற ஏவுகணை பரிசோதனையை நேற்று முன்தினம் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

இந்த ஏவுகணை அணுஆயுதங்களை தாங்கிச்செல்லும் வல்லமை கொண்டது என பாகிஸ்தான் இராணுவம் கூறியுள்ளது.

ஷாகின்-1 ஏவுகணை எவ்வளவு தூரம் செல்லும் என்பதை கூற பாகிஸ்தான் இராணுவம் மறுத்து விட்டது.

இந்நிலையில் ஷாகின்-1 ஏவுகணை இந்தியப் பெருங்கடல் வரை சென்று தாக்கும் திறன் கொண்டது எனத் தகவல் வெளிவந்துள்ளது.



இந்த ஏவுகணைச் சோதனை குறித்து இந்தியாவுக்கு முன்னரே பாகிஸ்தான் தகவல் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், ஏவுகணை சோதிக்கப்படும் பகுதியில் விமான சேவைகள் குறித்த எச்சரிக்கை யும் விடுத்தது. ஏவுகணைச் சோதனை வெற்றிக்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, பிரதமர் யூசுப் ரசா கிலானி ஏவு கணைப் பரிசோதனையை வெற்றிகரமாக நடத்தி முடித்த விஞ்ஞானிகளுக்கும், இராணுவ அதிகாரிகளுக்கும் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா, அக்னி-5 ஏவுகணையை விண்ணில் செலுத்திய 6ஆவது நாளில் பாகிஸ்தான் ஷாகின் ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரசார நடவடிக்கைகளை இடை நிறுத்தும் நியூட் ஜிங்ரிஷ்



அமெரிக்க தேர்தல் பிரசார நடவடிக்கைகளை குடியரசுக்கட்சி வேட்பாளர் நியூட் ஜிங்ரிஷ் இடைநிறுத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது முன்னிலை பெற்றுள்ள மிட் ரொம்னிக்கு தமது ஆதரவை நியூட் ஜிங்ரிஷ் வழங்கவுள்ளதாக அவரின் பேச்சாளரை மேற்கோள்காட்டி பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. குடியரசுக்கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் ஐந்து மாநிலங்களில் மிட் ரொம்னி நேற்றுமுன்தினம் வெற்றிபெற்றிருந்தார்.

தேர்தல் பிரசாரம் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து ஜோர்ஜியா மற்றும் தென் கரோலினா ஆகிய மாநிலங்களில் மாத்திரமே நியூட் ஜிங்ரிஷ் வெற்றிபெற்றிருந்தார்.

எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி தனது இறுதிப் பிரசார நடவடிக்கைகளை நியூட் ஜிங்ரிஷ் மேற்கொள்ளவுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

# அமைதித்திட்டத்தை சீர்குலைக்கும் சிரிய அரசின் நடவடிக்கைகள்

## – எச்சரிக்கிறார் ஹிலாரி

(வொஷிங்டன்)

ஐ.நா. பார்வையாளர்களுக்கு ஒத்துழைப்புத் தரும் பொதுமக்கள் சிரியாவின் அதிகாரிகளால் தாக்கப்படுகின்றனர். இந்த விதமான நடவடிக்கைகள் அமைதித் திட்டத்தை சீர்குலைத்துவிடும் என அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் சிரிய அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வொஷிங்டனிலுள்ள அவுஸ்ரேலிய வெளியுறவுத் துறை அமைச்சர் பாப் கர்-உடன் கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பேசியபோது ஹிலாரி மேற்கண்டவாறு எச்சரித்தார். அவர் மேலும் கூறியதாவது;



ஐ.நா. பார்வையாளர்களுடன் சந்திப்பு நடந்த அடுத்த நாளே இதுபோன்ற வன்முறைகள் அரங்கேறியுள்ளன. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. நிலைமையை ஐ.நா. பார்வையாளர்களிடம் எடுத்துரைக்க சிரியாவைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. கொபி அனானின் திட்டங்கள் வெற்றி பெற வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். ஐ.நா. பார்வையாளர்களை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வில்லையெனில், நாம் வெற்றிகாண முடியாது.

போர் நிறுத்தம் அமுலில் இருந்தும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு வன்முறைகள் உள்ளதாக கொபி அனான் கூறியுள்ளார். ஐ.நா. சார்பில் 300 பார்வையாளர்கள் அனுப்பப்படுவர்.

இப்போது 11 பேர் சிரியாவில் உள்ளனர். போர் நிறுத்தம் என்ற போர்வையில் போராட்டக்காரர்கள் மீது வன்முறையை சிரிய ஜனாதிபதி அசாத் கட்டவிழ்த்துவிடுகிறார்.

அமைதித் திட்டத்தின் சகல அம்சங்களையும் சிரிய அதிபர் நிறைவேற்ற வேண்டும். ஐ.நா. பார்வையாளர்களுக்கு அவர் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். கடந்த ஓராண்டில் மட்டும் 9000 பேர் சிரியாவில் பலியாகி உள்ளனர். தனது சொந்த மக்களை இப்படி வதை செய்யும் வரை, அசாத் மீதான சர்வதேச அழுத்தம் தொடரத்தான் செய்யும். தங்கள் மக்களை மின்னணு கண்காணிப்புக்கு உட்படுத்துவதற்கு சிரியா மீதும் ஈரான் மீதும் கடந்த திங்கட்கிழமை அமெரிக்கா தடை விதித்துள்ளது என்றார்.

# அணுவாயுத உற்பத்தியில் ஈரான் ஈடுபடவில்லை

## – இஸ்ரேல் தெரிவிப்பு

ஈரான் அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதாக தாம் கருதவில்லை என இஸ்ரேலின் உயர் மட்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அணுகுண்டு தயாரிப்பதா இல்லையா என்பது குறித்து ஈரானின் உயர் மட்டத் தலைவர்கள் இன்னும் தீர்மானித் திருக்கவில்லை என்றும் இஸ்ரேல் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் செய்திச் சேவை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஈரான் அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக மேற்குலக நாடுகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலும் இதுபோன்ற கருத்துக்களை முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இத்தாலிய வெளியுறவுத் துறை அமைச்சர் கிலியோ டேர்ஷி உடன் மியன்மார் தகவல் மற்றும் கலாசார அமைச்சர் கிவா ஹிசன் பேச்சுவார்த்தை நடத்துவதனைக் காணலாம்

# புயலிலே ஒரு தோணி: மரணத்தை எதிர்கொள்ளும் சாகசம்

– ம.நவீன்




'புயலிலே ஒரு தோணி' வாசித்த பின், சில கேள்விகள் எழுந்த வண்ணமே இருந்தன. அது நாவலின் கதாநாயகன் பாண்டியன் ஈடுபடும் விவாதங்கள் குறித்தவை.

பாண்டியன் பல்வேறு தருணங்களில் உடனிருப்போரிடம் விவாதங்களில் ஈடுபடுகிறான். எல்லாவற்றிலும் முரண்படுகிறான். அவன் முன் வைக்கும் ஆதாரங்கள் வலுவானவையாக உள்ளன. அவன் சொல்லும் ஆதாரங்களை ஆராய வாசகனும் தேடலில் ஈடுபட வேண்டியுள்ளது. அவன் எதையும் யூகத்தில் சொல்லாத பட்சத்தில் சிங்காரம் நேரடியாக நம்மிடம்தான் உரையாடுவதாகத் தோன்றுகின்றது. அது ஓர் அறிவுபூர்வமான உரையாடல். அந்த அறிவுடன் நாம் மோத வேண்டியுள்ளது. விவாதிக்க வேண்டியுள்ளது. உடன்படவும் முரண்படவும் வேண்டியுள்ளது.



தமிழகத்தை நேரில் காணாமல் கவிதை வழி கண்ட தில்லைமுத்துவிடம் பாண்டியன் தமிழ் வீரம் குறித்து பேசும் காட்சி முக்கியமானது. வேங்கைமார்பன் எனும் சின்னஞ்சிறிய கிராமத் தலைவனை பாண்டியன் எனும் பெரும் படைகொண்ட மன்னன் வென்றதில் என்ன பெருமை இருக்கிறது எனக் கேட்கிறான் பாண்டியன். விவாதம் தொடரவே, மாலிக்காபூரின் குதிரைப்படை வெகு தொலைவில் வரும்போதே, 'வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு தென்திசை யாண்ட தென்னவன்' ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் தேரியமங்கலம் மலைக் காட்டில் ஒளிந்துகொண்டான் என கிண்டலும் செய்கிறான். கிண்டலில் இறுதியில் 'தமிழ் வீரம், தமிழ் நாகரீகம் என்பதெல்லாம் நம்புலவர்களின் தோப்பி மயக்கத்தில் தோன்றிய வெறும் கற்பனையாக இருக்கலாம்' என்கிறான்.

பாண்டியன் மற்றும் அவன் நண் பன் மாணிக்கமும் பிற தமிழ் பெருமை பேசும் நண்பர்களுடன் ஈடுபடும் விவாதம் அங்கதம் மிக்கது. உரையாடல் வடிவில் அமைந்துள்ள பகுதியில் அவர்கள் பேச்சு உலக வரலாற்றில் ஆரம்பித்து, இலக்கியம், ஜாதி என தொடர்கிறது. எல்லாவற்றுககும் பாண்டியனிடம் மாற்று சிந்தனை உண்டு. அவன் எல்லாருடைய போலி நம்பிக்கைகளை, பெருமிதங்களை உடைக்கிறான்.

பாண்டியன் தமிழர் சிறப்பு குறித்து பேசத் தொடங்குகிறான். பெரிய கோயிலுக்கும் கல்லணைக்கும் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஃபேரோ மன்னர்கள் பிரமிட் கோபுரங்களைக் கட்டி விட்டதைக் கூறுகிறான். பாபிலோனியர் எப்போதும் நீர் நிறைந்த - அகன்ற யூபிரடீஸ் நதிக்கு அடியில் பதினைந்து அடி அகலமும் பன்னிரண்டு அடி உயரமும் கொண்ட சுரங்கப்பாதை ஒன்றை அமைத்திருந்தார்கள் என்கிறான்.

> பெரிய கோயிலுக்கும், கல்லணைக்கும் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, ஃபேரோ மன்னர்கள் பிரமிட் கோபுரங்களைக் கட்டிவிட்டார்கள்- பாபிலோனியர் எப்போதும் நீர் நிறைந்த - அகன்ற யூபிரடீஸ் நதிக்கு அடியில் பதினைந்து அடி அகலமும் பன்னிரண்டு அடி உயரமும் கொண்ட சுரங்கப்பாதை ஒன்றை அமைத்திருந்தார்கள்.

விவாதம் சட்டென இலக்கியத்துக்குள் நுழைகிறது. மாணிக்கம் தன் பங்குக்கு இலக்கியத்திலும் தமிழர்கள் தனிச்சிறப்பென்று சொல்ல ஒன்றும் இல்லை என்கிறான். திருக்குறளை யொத்த பல நீதி நூல்கள் பல்வேறு நாடுகளில் தோன்றி இருக்கின்றன. காப்பியங்களும் அவ்வாறே என்கிறான். பாண்டியன் இன்னும் தீவிரமாக விவாதத்தை முன்வைக்கிறான். எகிப்திய அமைச்சன் ப்தாஹோத்தப் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் மொழி பெயர்ப்பை படித்தபோது திருக்குறளைக் கரைத்துக்குடித்தவன் எழுதியது போல உள்ளது எனக்கூறி, அக்கடிதம் திருவள்ளுவருக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதம் என்கிறான்.

அடிகளாரின் தமிழ் நெஞ்சம் கொதிககிறது. தமிழின் பழமையான இலக்கியங்கள் நீராலும் நெருப்பாலும் அழிந்ததைச் சொல்கிறார். அந்த இயற்கைக்கே தமிழின் பெருமை தெரியும் என்கிறார். விடுவானா பாண்டியன், எத்தனையோ நாடுகளில் தொன்னூல்களும் மாமாளிகைகளும் அழிந்து போயிருக்கின்றன. அது தமிழகத்துக்கு மட்டுமே உடைய நிகழ்ச்சியல்ல. அதை வைத்து பெருமை பாராட்டுவது மடமை என்கிறான். கூடவே கிரேக்க மகா நாடகாசிரியன் சா∴பக்லீல் (கி.மு 495-406) எழுதிய நூற்றுக்கும் அதிகமான நாடகங்களில் ஏழு மட்டுமே கிடைத்திருக்கிறது எனக்கூற, அடிகளார் பரிதாபமாக யாரவன்? என்கிறார். பாண்டியன் எள்ளலுடன் 'அடிகளாருக்குத் தெரிந்திருக்க முடியாது. தெரிந்திருந்தால் அவருடைய இலக்கியப் பார்வை...” என கிண்டல் செய்கிறான்.

> இலக்கியத்திலும் மற்ற சில வகைகளிலும் தமிழன் சாதனை சிறப்பாக இருக்கிறது. ஆனால், தமிழே சிறந்த மொழி தமிழனே திறனாளி என்பது பிழை. எதற்குமே உண்மையின் அடிப்படை வேண்டும் என்கிறான் மாணிக்கம்.

பாண்டியன் பேச்சில் சமரசம் இல்லை. மாணிக்கம்தான் நிலையை சமப்படுத்துகிறான். இரண்டுமே சிங்காரத்தின் இருவேறு மனவெளிப்பாடுகள். 'இலக்கியத்திலும் மற்ற சில வகைகளிலும் தமிழன் சாதனை சிறப்பாக இருக்கிறதென்றும் ஆனால், தமிழே சிறந்த மொழி தமிழனே திறனாளி என்பது பிழை. எதற்குமே உண்மையின் அடிப்படை வேண்டும்' என்கிறான் மாணிக்கம்.

இவர்கள் பேச்சு தொடர்ந்து எவ்வாறு தமிழர்களைத் திருத்துவது என தொடர ஜாதி குறித்த பேச்சு வருகிறது. ஜாதியை ஒழித்தால் தமிழன் உயர்வான் என கருத்து நிலவ அதற்கும் பாண்டியன் மாற்றுக்கருத்தை வைக்கிறான். 'ஜாதி முறை ஜாதி வெறியாகத் தலை தூக்கியதற்குக் காரணம், பொது மக்களின் பாதுகாப்புக் கூட்டுறவு தேவை. தனியாகச் சென்று கோரினாலும் கூட்டமாகச் சென்று கோரினாலும் ஒரு மாதிரியான நீதியையே எதிர்பார்க்க முடியும் என்ற நிலைமை ஏற்படின் ஜாதி முறையின் பிடிப்பு தளரும் என்கிறான். கூடவே ஜாதி முறையைத் தாங்குவோர் அதற்காகப் போராடுவது, அதன் தன்மையினால் வரக்கூடிய பணம், பதவி, பட்டம் போன்ற பயனை எண்ணியே. அவற்றை அடைய ஜாதியின் துணை வேண்டாம் என்கிற போது ஜாதிப்பேர் தானாக மரித்துவிடும்' என்கிறான்.

பாண்டியன் தனது விவாதத்தில் ஜாதி ஒழிப்பு தேவையே இல்லை என பகிரங்கமாகவே சொல்கிறான். அறிவு வளர்ச்சி காரணமாக தோன்றும பரந்த மனப்பான்மையின் முன் ஜாதி, சமயம், இனம் போன்றவை அர்த்தமற்றவை என வாதிடுகிறான்.

ப.சிங்காரத்தின் சிந்தனை வியப்பளிக்கக்கூடியது. என் பாட்டி முன்பு சில ஜப்பானிய நோட்டுகளை வைத்திருந்தார். அதை வாழைமர நோட்டுகள் என்றும் சொல்வார்கள். அதில் வாழை மரப்படம் அச்சடிக்கப்பட்டிருக்கும். ஜப்பான் காலத் தில் அதிகம் சிரமப் பட்ட கதையை அவர் சொல்லியுள்ளார். வறுமை பயத்தின் விளைவாக சேமித்த பணம். அதை என்றாவது செலவழிக்க பத்திரப்படுத்தி வைத்திருந்தார். அவர் பத்திரப்படுத்திய இடம் இரகசியமாக இருந்தது. எனக்கு விவரம் தெரிந்த பின் அதற்கு மதிப்பில்லாத நிலையை விளக்கியவுடன் அவருக்கு பெரும் அதிர்ச்சி. 'ஜப்பானில் கூடவா?' என்றார். 'ஆமாம்' என்றேன். மெத்தைக்கு அடியில் வைத் திருந்த அதை தூரவீசினார்.

ஒன்றுக்கு மதிப்பில்லாத போது ஒருகாலத்தில் மதிப்புள்ளவை தூர எறியப்படுகின்றன. ஜாதியால் கிடைக்கக்கூடிய பலன்களை நீக்கிவிடுதல் அதன் வேரைப் பிடுங்குவதற்கான வழி. மிஞ்சி இருக்கும் கிளைகள் சுயமாக காய்ந்து, உதிர்ந்து, அழிந்து விடும். மற்றபடி 'ஜாதியை ஒழிப்போம்' எனும் கூச்சல்களுக்குப் பலம் மிகக் குறைவு.

பாண்டியனின் விவாதங்கள் இராணுவப் பயிற்சியில் சேர்ந்த பின்பும் தொடர கின்றது. இம்முறை தமிழர் உணவுப் பழக்கம் குறித்தது. ஒரு சந்தர்ப்பத்தில தமிழ்நாட்டில் நம் மூதாதையர்கள் மாட்டுக்கறி தின்றார்கள் என்கிறான். அதற்கு சங்க இலக்கியத்தில் இருந்து குடவாயில் கீரதனின் பாடலையும் ஆதாரமாக முன்வைக்கிறான். அவன் கூற்றை அப்துல் காதர் என்பவரும் ஏற்றுக் கொள்ள தயார் இல்லை. தமிழனாவது மாட்டுக்கறி தின்பதாவது என முகம் சுழிக்கிறார். மாணிக்கமும் விவாதத்தில் இணைந்து, தொண்டியாமூர் சாத்தன் பாடல்படி தமிழர்கள் யானைக கறி சாப்பிட்ட மரபை சொல்கிறான்.

பாண்டியனின் இந்த விவாதங்கள் ஒரு சந்தர்ப்பத்தின் தத்துவங்களின் சாயலோடு வெளிப்படுகிறது. அவன் நண்பர்கள், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் அனைத்தும் மாயக்கற்பனை என்கிறார்கள். பாண்டியன் அதற்குப் பதில் சொல்கிறான்.


ப. சிங்காரம்

கற்பனையில்லாமல் வாழ்க்கை இல்லை. கொள்கையில்லை. சமுதாயமில்லை என்பவன் அதை விவரிக்கவும் செய்கிறான். கற்பு எனும கற்பனை இல்லையானால் குடும்ப அமைப்பு இருக்காது என வாதிடுகிறான். பாண்டியன் சாகசத்தை விரும்புகிறான். அவனால் செயல்படாமல் இருக்க முடியவில்லை. போரிடுவது ஒருசவால் என்றால் விவாதிப்பதும் ஒரு சவால். அவன் சவால்களுடனேயே முயங்கிக் கிடக்கிறான். சவால்களை நோக்கி அவன் எப்போதும் எதிர்கொண்டே ஓடப் பார்க்கிறான். அதற்கான எந்தக் கொள்கைகளும் அவனிடம் இல்லை. விருப்பங்களே உள்ளன. பெரும் வாழ்வை அர்த்தப்படுத்திக் கொள்ள ஒரு சாக சநாயகன் தன்மையை உருவாக்க முயலகிறான். ஒரு தோணி பெரும் கடல் புயலில் தன்னை அர்த்தப்படுத்திக் கொள்ள முயல்வதுபோல.



பாண்டியனிடம் எல்லாவற்றிற்கும் மாற்றுக்கருத்து உண்டு. தமிழ் மன்னர்கள் வீரம், தமிழின் தொன்மை, தமிழ இலக்கியத்தின் சிறப்பு, சாதிய மறுப்பு, தமிழர் உணவு மரபு, அறிவின் தேவை என எல்லாவற்றிலும் அவன் சொல்ல ஏதோ ஒன்றை வைத்துள்ளான். ப.சிங்காரமே பாண்டியன் மூலமாக பேசுகிறார். ஒரு கட்டத்தில் ப.சிங்காரம்தான பாண்டியன் என்றும் தோன்றுகிறது.

முதல் கட்ட வாசிப்பின் காலகட்டத்தில் நான் ஓஷோவைத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். நாவலின் முடிவு எனக்குச் சட்டென ஓஷோ சொன்ன ஒரு கதையை நினைவு படுத்தியது. இன்றெனது வாசிப்புக்குப் பின்பும் அந்தக் கதையே நினைவில் வந்து அமர்கிறது.

ஒரு நதியில் இரு குச்சிகள் விழுகின்றன. ஒன்று குறுக்காகவும் மற்றது நேர்கோட்டிலும் மிதக்கின்றன. நேர்கோட்டில் விழுந்த குச்சி நதிக்கு தான் தான் பாதை காட்டுவதாக ஆனந்தத்தில் நதியுடன் இணைந்து பயணித்தது. குறுக்கே விழுந்த குச்சி தான் நதியின் ஓட்டத்தைத் தடைப்படுத்தப் போவதாகக் கடைசி வரை சாகசங்கள் செய்து பார்த்தது. இறுதியில் இரு குச்சிகளுமே பெரும் பள்ளத்தில் போய் விழுந்தன. நதிக்குக் குச்சிகள் குறித்து ஒன்றுமே தெரியாது. ஓஷோ சொல்ல வருவது வாழ்வின் நிஜத்தை.

ப. சிங்காரம் சொல்ல வருவதும் அதைத் தான் என நினைக்கிறேன்.

# கடற்போக்குவரத்து சேவை விஸ்தரிப்பு தீவக மக்களுக்கு வரப்பிரசாதம்



(ஊர்காவற்றுறை)

காரைநகரிற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான மக்களின் கடற்போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் பயணிகள் பாதைச் சேவையினை மேலும் இரு தடவைகள் சேவையில் ஈடுபடுத்தவுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தலைமையுரை நிகழ்த்துகையில்,

குறித்த பிரதேச மக்களின் இயல்பு வாழ்விற்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வகையிலும் பின் தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்குமான செயற்பாடுகளை சீராக முன்னெடுத்து செல்வதற்காகவுமே இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாயம், கால்நடை கட்டுப்பாடு போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், கால்நடைகளை கட்டுப்படுத்துவதில் பிரதேச சபையினர் உரியவகையில் செயற்படுவதில்லையென பொது மக்களும் பொது அமைப்புக்களும் ஒருமித்த குரலில் கருத்து தெரிவித்ததுடன் கால்நடைகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளை பிரதேச சபையினர் தன்னிச்சையாக மேற்கொண்டு வருவதாக சம்பந்தப்பட்ட திணைககள அதிகாரி சுட்டிக்காட்டியிருந்தார்.

கால்நடைகளை கட்டுப்படுத்துவதிலும் கால்நடைகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடைமுறைகள் முன்னைய காலங்களில் சரிவர நடைமுறைப்படுத்தப்பட்டபோதும், தற்போதே இவ்வாறான முறைகேடுகள் நிகழ்வதாகவும் அவ் அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

தொடர்ந்து மீன்பிடி, கல்வி, வீதி புனரமைப்பு, வீடமைப்பு, குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல், குடிநீர் விநியோகம், மீள் குடியேற்றம், போக்குவரத்து, மின்சாரம், மீள் எழுச்சித் திட்டம் போன்ற விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன், இவ விடயங்களில் முன்னெடுக்க வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளினை துரிதமாக செயற்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் பணிப்புரை விடுத்தார்.

இதேவேளை கால்நடை கட்டுப்பாடு மீன்பிடி தொடர்பாக நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வினை எட்டும் வகையில் ஓர் ஒன்றுகூடலை நடாத்துவது என இவ் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றுபட்டு உழைப்போம்



(யாழ்ப்பாணம்)

இந்நாட்டிலுள்ள 56 இலட்சம் இளைஞர் யுவதிகள் சேர்ந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்ப உழைப்போம் என்று யாழ். மண்ணில் உறுதியெடுத்துக் கொள்வோம் என இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்த புத்தாண்டு விழா நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

மேற்கத்தைய நாடுகளிடமிருந்து 1948 ஆம் ஆண்டு எமது நாடு சுதந்திரம் பெற்றுக்கொண்டிருந்த போதும் இற்றைவரை 60 ஆண்டுகள் கடந்திருக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் சுமார் 30 ஆண்டுகள் இனங்களுக்கிடையே சந்தேகமும் குரோதமும் குடிகொண்டிருந்தது. ஆனால் இன்று யுத்தம் நிறைவுபெற்றுள்ளது. அமைதி ஏற்பட்டிருக்கின்றது. இதனை எமக்குச் சாதகமாக்கிக் கொள்ள வேண்டும்.

சிங்கள - தமிழ் இனங்கள் வரலாற்று ரீதியில் கலாசார பண்பாடு ரீதியாக பின்னிப் பிணைந்தவர்களாகவே ஒட்டி உறவாடிய இனங்களாக இருந்திருக்கின்றன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூட இந்த நாட்டில் சிறுபான்மை பெரும்பான்மை இனங்கள் என்று ஒன்றும் இல்லை. யாவரும் இந் நாட்டு மக்களே என்று தெரிவித்திருக்கின்றார்.

எனவே இந்நாட்டிலுள்ள 56 இலட்சம் இளைஞர் யுவதிகளும் இணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்புவோம் என்று இந்த யாழ் மண்ணில் உறுதியெடுத்துக் கொள்வோம் என்று தெரிவித்தார்.

முன்னதாக இந்நிகழ்விற்கு வருகைதந்திருந்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும, ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி லலித் நியூம் பெரேரா ஆகியோருக்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் மாலை அணிவிக்கப்பட்டு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

தேசியக் கொடியேற்றலைத் தொடர்ந்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் நியூம் பெரேரா ஆகியோர் உரையாற்றினர்.

தொடர்ந்து மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின. முட்டி உடைத்தல், தலையணைச் சண்டை போன்ற போட்டி நிகழ்வுகள் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களிடையே நடைபெற்றது.

இதனிடையே அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணிக்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணிக்குமிடையே மென்பந்து கிரிக்கெட் போட்டி ஒன்றும் நடைபெற்றது.

இதேவேளை, மரதனோட்டம், சைக்கிளோட்டம் என்பனவும் நடைபெற்றன. இந்நிகழ்வுகளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பெருமளவு இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (பா)

## யாழ். நகரில்...

இப்பிரமாண்டமான பேரணியானது, யாழ். வேம்படிச் சந்தியிலிருந்து பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இந்தப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்ளுமாறு பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும், கிராமிய தொழிலாளர் அமைப்புக்களுக்கும், கடற்றொழிலாளர் சங்கங்கள் மற்றும் மாதர் அமைப்புக்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கம், நடைபாதை வியாபாரிகள் எனப் பல்வேறு அமைப்புகளுக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் அழைப்பு விடுத்துள்ளார். உழைப்பவர் தினத்தில் அனைவரும் ஒன்றுபட்டு, உரிமைகளை வென்றெடுப்போமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த மே தினத்தில் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் பொதுமக்களும், விவசாயிகளும், மற்றும் முற்போக்கு ஜனநாயக சக்திகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஆளுநரின் பாதுகாவலர் துப்பாக்கிச்சூட்டில் காயம்

(கொழும்பு)

மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானாவின் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் களுபோவில வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹணவிடம் வினவிய போது, சம்பவத்தை உறுதி செய்த அவர், ஒரு சக பாதுகாப்பு உத்தியோகத்தரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மேற்படி பாதுகாப்பு உத்தியோகத்தர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## தூக்கில் தொங்கி வயோதிபர் மரணம்

(வவுனியா)

வவுனியா - மகாரம்பைக் குளம் அம்மன் கோவில் வீதி அரனாநகர் பகுதியில் 64 வயதுடைய நாகலிங்கம் மகேஸ்வரன் என்ற முதியவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## கோப்பாயில்....

பாரிய தேடுதல் நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். கைப்பற்றப்பட்ட குண்டுகள், இராணுவத்தினரின் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரால் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஐ.பி.எல். ருவென்ரி - 20 தொடர்
## டெக்கான் வெற்றி




டெக்கான் சார்ஜர்ஸ் 177/4
புனே வாரியர்ஸ் 159/7
18 ஓட்டங்களால் டெக்கான் சார்ஜர்ஸ் வெற்றி

## மூதூர்...

நடத்தவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார். புதிய விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக சட்டமா அதிபர் திணைக்களத் திடம் இருந்து அறிக்கை ஒன்றுக்காக அரசு காத்திருக்கிறது. நாம் மீண்டும் இந்த விசாரணைகளை ஆரம்பத்தில் இருந்து மேற்கொள்வதிலேயே கவனம் செலுத்தி உள்ளோம் என்று அந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.

## சொத்துக்கள்...

விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். காணி, கட்டடம், வாகனங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப்பெற்றன என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

குறித்த பிரபல அரசியல் வாதிகளுடன் தொடர்புகளைப் பேணுவோர் மற்றும் பாதாள உலகத் தொடர்பு, சட்டவிரோத ஆயுத பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

## தீயில் எரிந்து...

மரணமடைந்தவராவார். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

குறித்த பெண் தனிமையாக வாழ்ந்து வருபவர் எனவும் இவர் மனநலம் பாதிக்கப்பட்ட நிலையில் கதவைப் பூட்டிவிட்டு தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்து எரிந்துள்ளார்.

இது குறித்த தகவல் அறிந்த மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரர்சன் தயான் மற்றும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மந்திகை ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (116,01)

## விகாரை...

சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இதில் எவரும் பாதிக்கப்படவில்லை எனவும் தெரியவருகின்றது.

விகாரைக்கு அருகிலுள்ள வாகனத் தரப்பிடத்தில் நின்று கொண்டிருந்த இளைஞர்கள் சிலரே தாக்குதலை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக லண்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தை மேற்கொண்டவர்கள் மற்றும் அதற்கான காரணங்கள் எதையும் அறிய முடியவில்லை என விகாராதிபதி கலயாயே பியதிஸ்ஸ தேரர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய இலங்கைக்குள்...

தொடர்பாக பேசப்பட்டு வருகிறது. இவை அனைத்தும் இதுவரையிலும் செயற்பாட்டிற்கு வரவில்லை. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகளும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினையில் சர்வதேசம் தலையிட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் காரணம் என அரசு குற்றஞ்சுமத்துகிறது. ஆனால் இந்நிலைமை ஏற்பட அரசு தான் காரணம். இந்தியாவிற்கும் சர்வதேசத்திற்கும் கொடுத்த வாக்குறுதிகளை அரசு நடைமுறைப்படுத்த தவறியமையே சர்வதேசத்தின் தலையீட்டிற்கு வழிவகுத்தது.

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கூட்டமைப்பு அரசுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. எனினும் அதனை அரசே இடையில் முறித்துக் கொண்டது.

இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாது. பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நேர்மையான அதிகாரம் மிக்க அரசியல் தீர்வு குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடாத்த தமிழ்த் தேசியக் கூட்மைப்பு தயார் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

# 'திட்டமிடல் மூலதத்துவங்கள்' நூல் கிளிநொச்சியில் வெளியிடப்பட்டது



இலக்கியம் சார்ந்த படைப்புக்கள் மட்டுமன்றி எமது மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் வகையிலும் எம் தேசத்தை கட்டியெழுப்புகின்ற வகையிலுமான தொழில்நுட்ப அறிவு சார்ந்த நூல்களும் எம்மண்ணிலிருந்து தொடர்ந்து வெளிவரவேண்டும் அந்தவகையில் மிகப் பொருத்தமான சூழலில் திட்டமிடல் மூலதத்துவங்கள் எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

அமரசிங்கம் கேதீஸ்வரனால் எழுதப்பட்ட திட்டமிடல் மூலதத்துவங்கள் எனும் நூலை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் வெளியிட்டு வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் மீளக்கட்டியெழுப்பும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கும் இக்காலத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் சரியான திட்டமிடல் கொள்கைக்கூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை நாம் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவோருக்கு வலியுறுத்தி வருகின்றோம். அவ்வாறு மேற்கொள்ளாத பட்சத்தில் நடைபெறுகின்ற எந்தவொரு செயற்பாடுகளும் மக்களுக்கு பயனளிக்காது போய்விடும் என்ற யதார்த்தத்தை அனைவரும் உணர்ந்து செயற்பட வேண்டிய காலமிது.

கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதித் திட்டப் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரனால் எழுதப்பட்ட திட்டமிடல் மூலதத்துவங்கள் எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கிளி.மத்திய கல்லூரி மண்டபத்தில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவனின் தலைமையில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வெளியிட்டு வைக்க, கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் இராசநாயகம், யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் நந்தகுமாரன், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன் ஆகியோரும் வழங்கினர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி யின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன். அரச திணைக்கள அதிகாரிகள் அலுவலர்கள் இலக்கிய படைப்பாளிகள் இலக்கிய ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாள்

(கொழும்பு)



ஹிங்குரக்கொட - பொரளுகந்தை பகுதியில் போலி நாணயத் தாள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். போலி நாணயத்தாள்களுடன் இந்த நபர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹன குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த நபரிடமிருந்து ஐயாயிரம் ரூபாவிலான 6 நாணயத்தாள்களுடன் மேலும் சில நாணயத்தாள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. போலி நாணயத் தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட கணினி ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## புலித்தேவனின் சகோதரர் விடுதலை

(கொழும்பு)

கிளிநொச்சியில் 2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் புலிகளின் ஆயுதப் பயிற்சி பெற்றவர் என்ற சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட புலித்தேவனின் சகோதரர் நேற்று யாழ். மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்.

கடந்த 2004ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கைது செய்யப்பட்ட சிவரட்ணம் பாலதயாகரன் (புலிமாறன்) என்ற புலித்தேவனின் சகோதரர் மீதான வழக்கு விசாரணைகள், யாழ்.மேல் நீதிமன்றில் தொடரப்பட்டிருந்தது. இந்நிலையில், இவர் கொடுத்திருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை மேல் நீதிமன்ற நீதிபதி ஜே.விஸ்வநாதன் ஏற்க மறுத்ததுடன், சட்டமா அதிபரின் மீளப்பெறுதல் மூலத்தை அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து குறித்த நபர், விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார். இவர் யாழில் உள்ளூர் பத்திரிகைகளுக்கு பிரதேச செய்தியாளராக பணியாற்றியவர் என தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.நகரில் தந்தை செல்வா நினைவு நாள் அனுஷ்டிப்பு



(யூழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவு நாள் நிகழ்வு நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.பொது நூலகத்துக்கு அருகாமையில் உள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் நடைபெற்றது.

தந்தை செல்வா நினைவு அறங்காவலர் குழுவின் தலைவர் முன்னாள் பேராயர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தந்தை செல்வாவின் மகன், பேராசிரியர் சிவச்சந்திரன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து கௌரவித்ததுடன், அறங்காவலர் குழுவின் தலைவர் அ.ஜெபநேசன் அடிகளாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

அதேவேளை, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், அருட்கலாநிதி அபி.ஜெயசேகரம், அஸ்லீம் அயுப் மௌலி ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து இலங்கை தமிழரசுக்கட்சியின் மூத்த பிரமுகரும், மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சொல்லின் செல்வர் செல்லையா இராஜதுரை தந்தை செல்வா நினைவுச் சொற்பொழிவை ஆற்றினார்.

இதேவேளை, நினைவு தினக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லையா இராஜதுரை உரையாற்றுவதற்கு ரெலோ அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கறுப்புக் கொடிகாட்டி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இதனால், நினைவஞ்சலிக் கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டது. இதனையடுத்து நினைவுக் கூட்டத்திலிருந்து சிவாஜிலிங்கம் வெளியேறினார்.

சற்று நேரத்திற்குப் பின்னர் தந்தை செல்வநாயகத்தின் நினைவுக் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதில் செல்லையா இராஜதுரை உரையாற்றும்போது, தந்தை செல்வா ஒரு அரசியல் பாடப்புத்தகம், அவர் தமிழ் மக்கள் பிரிந்து வாழ்வதை விரும்பாத ஒருவர். வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் உணர்வுகளில் கலந்துவிட்ட காலத்தால் அழிக்க முடியாத ஒருவர் என்றார்.

## ஏகாதசி விரதம்

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் மே மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை ஏகாதசி விரத பூசை சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்கு சிறப்புச் சமயச் சொற்பொழிவு இடம் பெறும். முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து ஸ்ரீமத் நாராயணர் ஸ்ரீதேவி பூமாதேவி சமேதராய் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு மகேஸ்வர பூசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (68)

## விபரீத முயற்சி சுவிஸ் பெண் மரணம்



உணவு, தண்ணீர் இல்லாமல் காற்றில் இருந்து நேரடியாக சக்தி எடுத்துக் கொள்வதாக கூறி விரதம் இருந்த சுவிட்சர்லாந்து பெண் பரிதாபமாக இறந்தார். உணவு, குடிநீர் அருந்தாமல் சித்தர்கள் பல ஆண்டு காலம் உயிர் வாழ்ந்ததாக கூறப்படுகிறது. உடல் இயக்கத்துக்கு தேவையான ஜீவ சக்தியை காற்றில் இருந்து அவர்கள் நேரடியாக பெற்றுக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. இந்தியாவில் வசிக்கும் யோகாசன குரு ஒருவர் இந்த முறையை பின்பற்றி 70 வயது வரை ஆரோக்கியமாக வாழ்வது தொடர்பான ஆவணப்படம் சுவிட்சர்லாந்து தொலைக்காட்சியில் 2010ஆம் ஆண்டு ஒளிபரப்பானது.

உல்ப்ஹால்டன் என்ற நகரை சேர்ந்த 50 வயது பெண் ஒருவர் இந்த நிகழ்ச்சியை பார்த்துள்ளார். ரேடிகல் ∴பாஸ்ட் எனப்படும் அந்த வகை விரதத்தை தானும் கடைபிடிக்க விரும்பினார். உணவு, தண்ணீர், பழம், காய்கறி எதுவும் சாப்பிடாமல் சூரிய வெப்பத்தில் இருந்து நேரடியாக சக்தியை பெற்று உயிர் வாழப்போவதாக கூறி விரதம் தொடங்கினார். எதிர்பாராதவிதமாக கடந்த ஜனவரி 11ஆம் தேதி அவர் இறந்துவிட்டார். இது தற்போது தெரியவந்துள்ளது. புகார் எதுவும் அளிக்கப்படாததால் இதுவரை சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ரேடிகல் விரதத்துக்கும், முறைப்படி தெரிந்துகொள்ளாமல் அதை கடைப்பிடிப்பதற்கும் சுவிஸ் நாட்டில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. ஜேர்மனி, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகளிலும் பலர் ரேடிகல் ∴பாஸ்ட் விரதத்தை பின்பற்றி வருவதாக கூறப் படுகிறது.

## சம்பூரில் வீடுகள் கையளிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூர் பிரதேசத்திலிருந்து யுத்தத்தின் போது இடம்பெயர்ந்து வாழ்ந்த 56 குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் புதிய வீடுகள் கையளிக்கப்பட்டன. சேனையூர் கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட சீதனவெளி பிரதேசத்திலேயே புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள 56 வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

மீள்குடியேற்ற அமைச்சு 16 மில்லியன் ரூபா செலவில் இந்த வீடுகளை அமைத்துள்ளது. இராணுவத்தின் 22ஆவது படைப் பிரிவினர் இந்த வீடமைப்புதிட்டத்திற்கு நேரடி அனுசரணையினை வழங்கியிருந்தனர். 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோதல்களின் போது இடம் பெயர்ந்த மேற்படி மக்கள் பட்டித்திடல் கிளிவெட்டி கட்டைப் பறிச்சான் மற்றும் சந்தோஷபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள இடைத்தங்கல் முகாம்களில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விரிவுரையாளர்கள் வீதியில்

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு பல்கலைக்கழக வளவில் ஆர்பாட்டப் பேரணி ஆரம்பிக்கப்பட்டதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் பேராசிரியர் மஹிம் மெண்டிஸ் தெரிவித்தார். இலங்கை பல்கலைக்கழகங்களின் அனைத்து தரப் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டார். தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### திருமதி புலேந்திரராஜா காந்திமதி



வேலணை மேற்கு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புலேந்திரராஜா காந்திமதி கடந்த 26.04.2012 நேற்று வியாழக்கிழமை காலமானார். அன்னார் புலேந்திரராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கனகரத்தினம் மகாலெட்சுமி அவர்களின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான தம்பு சிவபாக்கியம் ஆகியோரின் மருமகளும், பாலசிறிதரன் (சிறி), ஜெயந்திரன், ஸ்ரீபன், சக்திகரன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தியவாணி, யோகமலர், சிவகௌரி (லண்டன்), விஜந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கருணாநிதி, கோமதி, செல்வநிதி, பூமதி மற்றும் காலஞ்சென்றவர்களான இந்துமதி, விசாகரெத்தினம், வளர்மதி ஆகியோரது சகோதரியும் துஷாரா, பிரஷாந், பிருஷா, கிரிஷாந், லக்சிகா (லண்டன்), மதுசன் (லண்டன்), விதுஷா, டக்சிகா, நிசிகா ஆகியோரது பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (27.04.2012) மாலை 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
வேலணை மேற்கு,
வேலணை.

(C/168)

தகவல் :
பு.பாலசிறிதரன் (சிறி),
மகன்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.